உ
கணபதி துணை.

# வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—திருக்குறள்.

| தொகுதி. | பிங்கள-௵ சித்திரை-மீ | பகுதி. |
| --- | --- | --- |
| 9 | 1917 May | 4 |

## இந்தியக் கல்விமுறை.

**நமது** பாநுவின் சென்ற ஸஞ்சிகையில் "கல்வியும் தர்மமும்" என்று எடுத்துக் கொண்டு, 'கல்வியே தர்மத்தை யுயர்த்துகின்றது; மாணவர்கள் ஆத்ம தர்மத்தை யுணர்ந்தால் அல்லாமல் தேச தர்மத்தில் நடைகொள அறியாகள்; அவர்கட்கு அத்தர்மத்தை யூட்டுவது நல்லாசிரியரது தொழிலாகும்; நல்லாசிரியர் ஆவார் சீலம் குணம் ஆசாரம் கருணை என்னும் இவ்வியல்பினை யுடையார்; அந்நல்லாசிரியனைக் கல்விசசங்கத்தார் மனுமுறைப்படி கவுரவிக்க வேண்டும்; அதற்குத்தக கல்விச் சங்கங்களும் அத்தேசத்தவரா லேயே நடத்தப் பெறல் வேண்டும்' என்னும் இவ்விஷயங்கள்" ஆளப் பெற்றன.

எனவே, நமது தேசதர்மம் வளரவேண்டின் நமது மாணவர்கள் நமது தேசத்தலைவர்களால் நடத்தப் பெறும் கல்விச்சாலைகளில் சேர்ந்து நமது தேசாபிமானிகளாகிய தர்மாசனையில் நிற்கும் கற்ற புலவர்களாலே பயிற்றுவிக்கப் படவேண்டும் என்பது பெற்

னும். எனினும், அவ்விதமான கல்விச்சாலைகளில் கற்பிக்கும் முறை எவ்வண்ணம் இருக்க வேண்டியது? என்னும் விஷயம் இங்கு ஆராயற்பாலது. நமது தேசம் இந்திய தேசமாதலால், இந்திய தர்மம் உயர்ந்தேறவேண்டின் இந்திய மாணவர்கள் இந்தியமுறையிலேயே கற்பிக்கப்படல் வேண்டும் என்பது மிகையாகாது. இந்தியக்கல்விமுறையாவது யாதெனின்:-இந்திய தர்மத்தைத் தெற்றெனப் புலப்படுத்தும் இந்திய வழக்கவொழுக்கங்கள் இந்திய சாஸ்திரங்கள் இந்திய சரித்திரங்கள் முதலான இந்தியாது பூர்விக மேதாவிகளுடைய சம்பந்தம் பெற்ற நூல்களின் முறைகளானே பயிற்றுவதாகும். மனுமுறையினைப் பழகிவந்த வரையில் இந்தியா ஏற்றத்தையடைந்திருந்தது என்று பன்முறை சொன்னபோதிலும் குற்றமாகாது; அம்முறை இந்திய முறையாகலின். நேயர்களே! நமது பூர்விக சாஸ்திரங்களையும் ஒழுக்கங்களையும் வழக்கங்களையும் எக்காரணம் பற்றியேனும் இகழாமல் இருக்கும்படி மிகுந்த வணக்கத்துடன் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறோம். எத்தேசத்திலும் உத்தமர்கள் தங்களது பூர்விகரை இகழார்கள் என்பது திண்ணம். அவர்கள் (பூர்விக மேதாவிகள்) ஏற்படுத்தி வைத்திருக்கும் நூல்களையும் அவற்றில் நிறைந்துள்ள தர்மங்களையும் அவற்றின்வழி அவர்கள் நடந்துகாட்டியுள்ள ஒழுக்கங்களையும் நாம் ஸத்வசிந்தையுடன் கவனித்தோமாயின், அவை உலகமழியும் வரை நடத்தப்பெற வேண்டிய தர்மங்களாகத் தோன்றுமேயன்றி வேறாகாது என்பது நமது அறிவுக்குப் புலப்படாமல் போகாது.

நூதனமுறையாகிய ஆங்கில முறைக்கும் புராதன முறையாகிய மனுமுறைக்கும் வித்யாஸம் சொல்லப் புகுந்தோமாயின், புராதன முறையில் தேகாப்பியாஸத்துக்கு வேண்டிய பயிற்சிகள் காட்டப் பெருமையே முன்னிற்குமென்று எண்ண இடமுண்டு. தேகாப்பியாஸத்தால் வரும் பயனென்னவென்று ஆலோசித்தால், சுத்தமான காற்றைப் பரிசிப்பதும் உருசிப்பதும் உட்கொள்ளுவதும் அவற்றால் தேகத்தில் நோயுண்டாகாமல் இருப்பதுமே எனப்பெறுவோம். இவற்றை நித்யகர்மமாகிய ஸந்தியாவந்தனத்தினாலேயே பெற

கின்றோம். என்னை; பிராணாயாமப் பயிற்சியைவிட வேறொன்றும் தேக சுத்தியைத் தரும் என்று எண்ணுவதற்கு இடமுண்டோ? இன்னும் இந்தப்பிராணாயாமப் பயிற்சியானது ஆத்மசுத்தியையும் தருகிறது. நூதனமான தேகாப்பியாஸ முறை ஆத்மசுத்தியைத் தருவதற்கு இயலாது. பிராணாயாமப் பயிற்சியால் சிறவிக்கிப்பெற்று, ஸர்வதேசங்களிலும் கண்டங்களிலும் சென்று, வெற்றியும் விருதும் பெற்ற கலியுகபீமனென்று அழைக்கப் பெறும் நமது ப்ரொபஸர் இராமமூர்த்தியே இதற்குத்தக்க ஸாட்சியாவாரன்றோ? கல்விச்சாலைகளில் பிராணாயாமப் பயிற்சியைக் கிரமமாகவும் கவனமாகவும் ஒரு நல்லாசிரியர் பழக்கி வந்தாராயின், பல்லாயிரம் இராமமூர்த்திகளை யுண்டு பண்ணலாமன்றோ? அவர்களை நமது தேசத்தைக் காவல் பூணும் உத்தம க்ஷத்திரியராவார் என்பதில் ஐயமும் உண்டோ?

நமது மனு இம்முறையைப் பற்றியன்றோ க்ஷத்திரியவர்ணத்தாருக்கு நிறைந்த க்ஷத்திரிய அம்சத்தையும் மற்ற மூன்றுவருணத்தாருக்கும் சொல்ப க்ஷத்திரியாம்சத்தையும் வகுத்திருக்கிறார். இந்நால்வருமே தேசக் காவலில் சிறப்புடையவர்களாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிக்கின்றார்.

நமது மதக்கொள்கைகளில் நமது மாணவர்களைப்பயிற்றுவதும் ஒரு முறையேயாகும். தற்காலத்திலோ ஆங்கிலமுறையில் மதக்கொள்கைக்கும் கல்விக்கும், மதக்கொள்கைக்கும் சாஸ்திரங்கட்கும் ஸம்பர்கம் இருப்பதாகவே காட்டப் பெறக்காணோம். மனுமுறையோ மதக்கொள்கையும் சாஸ்திரங்களும் வேறுபட்டனவாகக் காட்டவில்லை. சாஸ்திரங்கள் இல்லாவிடின் மதமில்லை; மதமில்லாவிடின் சாஸ்திரங்கள் இல்லை. நமது சாஸ்திரங்கள் முறையே பயிற்றுவிக்கப் படுமாயின் மதக்கொள்கையின்றி பயிற்றுவிப்பது யங்ஙனம் இயலும்? நேயர்களே! இந்து மதம் என்றது இந்து மதமாகிய பொது மதத்தையேயன்றி, இடையில் பொதுநோக்கில்லாத மாற்சரியத்தால் வேறு படுத்திக்கொள்ளப்பட்டுப் பிரிவுபட்ட மதக்கொள்கையையன்று. ஒரு பொது மதத்திலிருந்து மாற்சரி

யத்தால் பலகொள்கைகள் பிரிவாகத் தோன்றிய தன்மை நமக்கு மாத்திரமல்ல ஏனைய தேசத்தாருக்கும் மதத்தாருக்கும் உண்டு. ஏனெனில்:—எல்லாத் தேசத்திலும் நல்லவர் தீயவர், பொறுத்தவர் பொறாதவர் உண்டாகலின் என்க. ஆகலின், நமது மாணவர்க்கு நமது பொதுமதக்கொள்கைகளைத் தெரிவிப்பதன் நிமித்தம் நமது சாஸ்திரப் பயிற்சியைக் கொடுத்தோமாயின், அதனுள் ஒருபாகமாகிய ஸந்தியா வந்தனப் பழக்கமுண்டாகிப் பிராணாயாமத்தில் தேர்ச்சி பெற்று நமது மாணவர் நோயின்றி உத்தம க்ஷத்திரியர்களாகித் தேஹசுத்தி ஆத்மசுத்தி பெற்றுத் தேசக்காவலில் சித்தர்களாக நின்று உழைப்பார்கள். அப்பொழுது வர்ணதர்மங்களும் கூட்டுறவில் கலந்து துவேஷ புத்தியில்லாமலே காக்கப் படும்.

இக்காலத்தில் பிராணாயாம முறையின்றியே, பலாத்காரமாகத் தேஹாப்பியாஸம் பயிற்றப் படுவதால், மாணவர்களிற் பலரன்றிச் சிலரே ஒருவாறு தேகபலத்துடன் வளர்ந்து வருகிறார்கள். அப் பலரோ தேஹம் பலத்தில்லாராயிருக்கும் போதே, கல்வியால் மனதுக்கு அதிக வேலையைக் கொடுப்பதன் நிமித்தம், இளைத்தவர்களாகித் தேஹத்தை இழந்தோ அன்றி வியாதியுடனிருந்தோ, தாங்கள் விரும்பிக் கற்ற கல்வியைத் தமக்கேனும் பிறர்க்கேனும் தேசத்துக்கேனும் உலகுக்கேனும் கொடாதவர்களாகி ஒழிகிறார்கள் என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

மனுவின் முறைப்படி குருகுலவாசமும் ஒருமுறையாகும். குருகுலவாசமென்றால் மாணவர்க்குப் பாடசாலையே வீடாகுமென்பதே. அதாவது மாணவர்கள் தமது குருவின் வீட்டிலேயே வாழ்ந்திருந்து தமது கல்விபயிலும் காலமாகிய பிரமசரிய நிலையை ஒழுங்குபெறப்பழகி வருவதாகும். மனுமுறைப்படி ஒழுகிய பிராமணன் ஆத்மசுத்தி ஆஸ்திகபுத்தி ஸ்தூல ஒழுக்கம் இவற்றை நன்குஉணர்வான். அம்முறையில் பழகிய க்ஷத்திரியன் அம்மூன்றனோடு தேஹப்பயிற்சியின் மிகுதியால் தற்காவல் தருமக்காவல் இவற்றில் பழக்கம் பெறுவான். வைசியனோ அம்மூன்றனோடு தேஹபலமும் அறத்தின் வழிப் பொருளீட்டலும் தக்குழிச் செலவிடலுமாகிய வழக்கம் உறுவான். அங்ஙனமே குடித்தனப் பாங்கிலும் மற்றும்மேற்கண்ட தொழில்களிலும் நான்காம் வருணத்தாரும் நல்லமேம்பாடுறுவான்.

ஆனால் குருகுலவாசமென்று சொல்லும்போது கீழ்வரும் விஷயங்கள் அவசியம் கவனிக்கப்படல் வேண்டும். பாடசாலைக்குவரும் உபாத்தியாயரும் முன்ஸஞ்சிகையில்கூறப்பட்டுள்ளபடி சீலம் குணம் ஆசாரம் கருணை தேசாபிமானம் பாஷாபிமானம் சாஸ்திரசிரத்தை இவற்றை யுடையவர்களாக இருத்தல் வேண்டும். பாடசாலையும் நகர்க்கு வெகுதூரத்தில் நல்லகாற்றுள்ள இடத்தில் கட்டப்பெறல் வேண்டும். விசேஷஅறைகள் உடையதாகி மாணவர்கள் நெருக்கத்தால் கஷ்டப்படாது இருக்கும்படி அமைக்கப் பெறல் வேண்டும். யாழ்ப்பாணத்து இணுவில் என்னும் கிராமத்தில்கட்டப்பெற்றுள்ள ஸ்ரீமாந் P இராமநாதன் பெண்பிள்ளை காலேஜ் இதற்கு எடுத்துக் காட்டாகலாம். நல்ல ஜலவசதியையும் தலவசதியும் அமையப்பெற்றதாக இருக்கவேண்டும். உபாத்தியாயரது உத்தரவின்றி மாணவர் தமது கல்விச்சாலையினின்றும் பெற்றோரது கிருஹத்துக்குச் செல்லவாவது, பெற்றோரும் அடிக்கடி மாணவரை வருவித்துக் கொள்ளவாவது கூடாது.

எனவே, இந்தியக் கல்விமுறையானது, 'தேஹபலத்தையும் மனோபலத்தையும் ஒருங்கே தருவதான பிராணாயாமத்தில் பழகுவதன் நிமித்தம் மதக்கொள்கைகளைப் பயிற்றும் முறையென்றும், நல்ல பழக்கத்தையடைவதன்நிமித்தமும் மதக்கொள்கைகளையுணர்வதன் நிமித்தமுமாக சாஸ்திரங்களைப் பயிற்றும் முறையென்றும், இவற்றை உபதேசங்களாலும் ஆசரணையாலும் பழக்கத்தகுதியுள்ளவரான நல்லாசிரியரிடம் பயின்றுவருவதன் நிமித்தம் குருகுலவாசம் செய்யும் முறையென்றும், இன்னும் இவைபோன்ற இந்தியரது தேசதர்மத்தைக் காப்பாற்றக்கூடியவையென்று மேதாவிகளால் அறுதியிடப் பெறும் முறைகளென்றும் பொருளாகிறது. ஆகையால் இந்தமுறையே நமது சொந்தமுறையாகும். தற்காலம் வந்தமுறையான மேனாட்டு முறையோ நமது தேசத்திற் கோணட்டா முறையாகும். தற்கால நாகரிகத்துக்கு வேண்டிய நூல்களையாக்கிக் கொண்டேனும்இம்முறையில் மாணவரைப் பயிற்றுவதே உத்தமம்.

பத்திராதிபர்.

# பத்திரிகையும்
# அதன் பிரயோஜனமும்.

பத்திரிகை என்றால் என்ன? நாம் அதை ஏன் படிக்கவேண்டும்? படித்தனால் அடையும் இலாபமென்ன? அப்படிப் படித்தவர்கள் யாராவது முன்னேற்றத்திற்கு வந்திருக்கிறார்களா? என்பதைச் சற்று கவனிப்போம்.

பத்திரிகையாவது:—லோகாநுபவத்தை யூட்டியுளவும் ஓர் தூதன். உலகத்தில் எந்த இடங்களிலும் நடக்கும் சமாசாரங்களை நேரிற்கண்டவாறு பேசும் ஓர் மித்திரன். ஜனங்களுக்கு அஞ்ஞானமாகிய இருளைப் போக்கி ஞானதீபத்தை ஏற்றிவைக்கும் ஓர் தினகரன். பிரஜைகளுக்கும் அவர்களை ஆளும் அரசாங்கத்தாருக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கிக் காட்டும் ஓர் பந்து. "மன்னுடன் கூடிவாழ்" "ஒப்புரவொழுகு" "தேசத்தோடொத்துவாழ்" என ஔவையார் திருவாய் மலர்ந்தருளிய அமிர்த சஞ்சீவியாகிய சொற்களைக் கேட்டானந்திக்கும் நீதிமான். யாதொரு மனிதன் உலகத்தை யொட்டி நடப்பவனாயிருப்பானானால், அவன் நிச்சயமாகப் பத்திரிகையின் துணையாலேதான் லோகாநுபவத்தில் மேன்மையடைந்திருப்பானென்பது யாவரும் மனத்துட்கொள்ளும் விஷயமன்றோ?

நாம் அதை ஏன்படிக்கவேண்டுமென்பதைச் சற்று ஊகிப்போம். பல்லாயிர மைல்களுக்கப்பால் நடக்கும் இம்மகாயுத்தத்தை யாவர்தான் அறிவார்? நமதூரில் ஓர்மூலையில நடக்கும் விஷயத்தை முற்றிலுமறியச் சக்தியில்லாத நாம் மேற்கூறிய அநேகமைல்களுக்கப்பால் நடக்கும் மகாயுத்தத்தை யாதொரு சிரமமும் செலவும் இல்லாமல் இருந்தவாறே உணருகிறோம். கடலில் அநேகம் கப்பல்கள் மூழ்கும்பொழுது அவைகளைக்கேட்டு விசனித்தும, மகிமைதங்கிய நம்சக்கிரவர்த்தியார் பாக்தாத் நகரத்தைக் கைப்பற்றிவிட்டார் என்பதைக் கேட்டதே ஆனந்தித்தும், இரக்கமற்ற சத்துருக்களின் செயல்களைக் கேட்கத் துவேஷங்கொண்டும், நேசக்கக்ஷியாரின ஜெயங்களைக் கேட்டு உற்சாக மடைந்தும் இருக்கிறோம். இவ்வாறு நமக்குஉற்சாகத்திற்கும் பயத்துக்கும் தற்காலத்தில பெருத்த சாதகமாக விளங்கும் இப்பத்திரிகையைப் படிக்காமலும் இருக்கலாமோ? அந்நிய தேசத்து ஜனங்கள், கல்வி கைத்தொழில வியாபாரம்

கிருஷி நாகரீகம் முதலிய விஷயங்களில் நம்மைவிட உயர்ந்திருக்கிறார்களா அல்லது கீழ்ப்பட்டிருக்கிறார்களா? என்பதை அறியவேண்டியது இன்றியமையாததாயிருப்ப, அதற்குத் தக்க சாதகம் பத்திரிகையன்றோ? ஒப்பந்தக் கூலியைப் பற்றி நம்மவருள் அநேகர் மிகவும் சிரத்தைபாராட்டிப் பத்திரிகைகளின் மூலமாய்க் கதறி வாழ்ந்து நாமோக்ஷிமை தங்கிய இராஜப் பிரதிநிதியவர்களின் காதுக் கெட்டி, இப்பொழுது கூலிகள் குடியேறு நாடுகளுக்குப் போகாம லிருப்பதைப் பற்றிய சட்டம் ஏற்படவில்லையா?

காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணகோகலேயவர்கள், அம்மம்மா!. அவர் நாமத்தின்பெருமையே பெருமை! அவர் நம்மவருக்காகப் பட்டபாடுகளெல்லாம் பட்டு ஜனங்கள் மெச்சத் தக்கதான இராஜ கௌரவங்களையும்விலக்கிச சுயநலத்தையுந்துறந்து தேசத்தினநன் மைக்காகக் கல்வியைக் குறித்து உழைத்தவரத சிறப்பினாலன்றோ நம் தேசத்தில் இப்பொழுது கல்வி வாசனைபரவுகின்றது? பத்திரிகையன்றோ இப்படிப்பட்ட தேசபக்தர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க ஏதுவாயிருக்கிறது?

பத்திரிகை வாசிப்பதனா லடையும் இலாபமென்ன? கல்வி யபிவிருத்தியாகிறது. நாகரிக முன்னேற்ற மடைகிறது. லோகாநு பவம் சீக்கிரத்தில் உற்பத்தியாகிறது. ஒருவனுக்கு லோகாநுபவம் கிட்டவேண்டியிருந்தால் நிரம்ப நாட்கள் செல்லும்; நம சரீரமாகிய மரத்தைக் காலத்தச்சன் வெட்டி முறிக்கச் சமயம்பார்த்துக் கொண்டிருப்பதால், "காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்" என்ற முதுமொழியைப் பின்பற்றிக் காலம் வாய்த்தபொழுதே அதையா ராய்ந்து நடப்பது அறிவுள்ளோர்களின் செயலன்றோ?

பத்திரிகை வாசித்து யாராவது மேன்மை யடைந்திருக்கிறார்களா வென்பதைச சற்றுகவனிப்போம். பத்திரிகையைக் கட்டாயப் படிப்பாக்கிப் பள்ளிக்கூடங்களின் மாணவர்களுக்கு அமெரிக்காவில் கற்றுக்கொடுக்கிறார்களாம். என்னே! அவர்களின் சிறந்தநோக்கம்! அமெரிக்கா ஜெர்மனி ஜப்பான் இங்கிலாந்து முதலிய தேசங்கள் நம் தேசத்தைக் காட்டிலும் நூதன சாஸ்திரப் பயிற்சியிலும் நாகரிகத்திலும்செல்வத்திலும் முன்னேற்ற மடைந்ததற்குப் பத்திரிகைபடிப்பதே காரணமென்று ஒருமுறையல்ல பன்முறை சொல்லுவேன். நம் தேசத்திலோ பத்திரிகை படிக்கும் அப்பியாசம் சோம்பேறிகளுக்கும் அதிகப்பிரஸங்கிகளுக்குமே யுரியதென்று நம்மவருள் அநேகர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அந்தோ! இவர்களின் எண்ணம் இருந்தவாறென்னேயோ!!

பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் ஜப்பான் தேசம் படித்தவர்களுக்கு மாத்திரம் தெரிந்திருக்க, இச் சொற்பகாலத்தில் கல்வியிலும் செல்வத்திலும் உயர்ந்து சாதாரண ஜனங்களுக்கும் தெரியும்படியாய்க் கைத்தொழிலை விருத்திசெய்து விட்டது. இதற்கு முக்கியகாரணம் பத்திரிகைகளின் நடமாட்டமே யன்றி வேறு அல்ல. கைத்தொழிலிலும் செல்வத்திலும் மேன்மை யடைந்திருக்க அவ்விடத்திலிருந்து ஏற்றுமதியாகும் சாமான்களும அமெரிக்கா இங்கிலாந்து ருஷ்யா முதலிய தேசங்களுக்கு இந்த யுத்தத்தை யுத்தேசித்துக் கொடுத்திருக்கும பணமும் அத்தாக்ஷியாக இருக்கின்றன. அத்தேசத்தில் 1200க்கு மேல் தினசரிப் பத்திரிகைகள் உலவுவதாக பத்திரிகை மூலமாய்ப் படித்திருக்கிறோ மன்றோ?

கல்வியைக் கருதும் கனதனவான்களே? நம் இந்தியாவில் தினசரிப பத்திரிகைகளின் நடமாட்டமோ மற்றத் தேசங்களின் பத்திரிகைகளின் செழிப்பும் நன்றாய்க் கவனிக்கப் படவேண்டும். மேல் நாடுகளில பத்திரிகைகளைப் படிக்காத ஜனங்களைப பார்ப்பதரிது. இவ்விடத்தில் படிக்கும் ஜனங்களை அதிகமாய்க் காண்பதரிது. அநேகர் பெருமைக்குப்பத்திரிகையை வரவழைத்து மேல கவர்களை (கூடுகளை) கூடதிறக்காமல வைத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஜனங்கள் மெச்சுவதற்காகப பத்திரிகையை வரவழைப்பது? அல்லது அறிவை விருத்தி செய்து கொள்ளுவதற்கு வாங்குவது? ஆனதினால் அன்பிற சிறந்த நண்பர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம். பத்திரிகையை எந்த மூகாந்தரத்தைக் கொண்டும் அவமதிக்காது, நமது பரதநாடு முன்னேற்றத்திற்கு வர, இது, ஓர் தூண்டுகோலாய் இருந்து வருவதாய் இதை மிகவும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் வாங்கிவாசித்தல் அறிவை விருத்திசெய்து, நம்நாடு செல்வத்திலும் நாகரீகத்திலும் படிப்பிலும் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் வேளாண்மையிலும் முன்னேற்றத்திற்குரிய சாதனங்களைத் தேடி நம் பாரதமாதாவின் மனதை உற்சாகப்படுத்த முன்வருமென்று எல்லாம்வல்ல பரம கிருபாநிதியாகிய எம்பெருமானைத் தொழுகின்றனன்.

Karaikudi.

Rajagopala Rao
Correspondant.

---

(இது, புதுவயல் லலிதா விலாஸ ரீடிங்ரூம் அண்டு பாட்மிண்டன் கிளப் முதல் வருஷோத்ஸவத்தில், M. V. கோவிந்தராஜ ஐயங்கார் அக்கிராஸனத்தின்கீழ் படிக்கப் பட்டதன் ஸாரம்).

# * அறிவின் பயன் யாது?.

கிருபா ஸமுத்ரம் சுமுகம் த்ரிநேத்ரம் ஜடாதரம் பார்வதிவாமபாகம்
ஸதாசிவம் ருத்ர மநந்தரூபம் சிதம்பரேசம் ஹ்ருதிபாவயாமி ||

அறிவின் பயன்யாது என்பதை அறிவு+பயன்+யாது, என்று பிரித்துப் பொருள் சொள்ளப்படும். அர்த்தம்: அறிவினுடைய பயன் எது? என்பதாம். எனவே, நாங்கள் தேகத்தோடு கூடியிருந்து அறிவைச் செலுத்தும் பல்வகைச் செயல்களினும் நல்வகைச் செயலொன்றுள்ளது; அதன் வழியே அறிவைச் செலுத்த வேண்டும் என்பது குறிப்பாம்.

அறிவு, என்றும் எல்லாப் பிராணிகளிடத்திலும் அமைந்த இயல்பான ஒரு குணமாம். இக்குணம் மனத்தோடு சம்பந்தமுடையது. மனம் ஒன்றை எண்ணும்போது அறிவு துணை செய்யும். மனம் ஒன்றையும் நினையாது இருக்கவே மாட்டாது. நன்மையானவைகளைச் செய்ய ஏவினால் நல்லறிவு என்றும், தீமையானவைகளைச் செய்ய ஏவினால் தீயஅறிவு என்றும், நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது ஆவசியகமாகும். ஏனெனில்; அறிவினாலே மனதை நல்வழிகளிலே செலுத்தி நன்மையடைய வேண்டுமென்பதே எங்கள் தர்மமாதாக்களின் எண்ண. மனித தேகிகளாகிய நாங்கள் அறிவினாலே மற்றைப் பிராணிகளிலும் மேன்மையுடையவர்களாக இருக்கின்றோம். மற்றைய விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, மரம் முதலியனவற்றிற்கும் அறிவு உண்டு. சில லோகவஸ்துக்களுக்கும் ஒருவித உணர்ச்சி உண்டு என்று தத்துவ சாஸ்திர நிபுணர்கள் கண்டிருக்கின்றார்கள். "பொட்டாஸியம் ஸையனைட்" என்னும் விஷமருந்தினால் சிற்சில பொருள்களின் மாறுபாடுகளை நன்கு அறியலாம். இது தத்துவ விசாரிணிகள் கூற்று.

---

* (இவ்வியாசம்—தேவகோட்டை, வைசிய விவாகார்த்த சபையின் மூன்றாம் வருஷ நிறைவு விழாக்காலத்தில் திருநெல்வேலி ஸ்ரீமாந். V. N. சோமசுந்தரம்பிள்ளை யவர்கள் (B. A., B. L.) அக்கிராசனத்திற் செய்யப்பட்ட பிரசங்க சாராம்சம்.)

தாவரங்களுக்குள்ள உபாதிகளையும் அறிவின் வேறுபாடுகளையும்
நமது இந்திய தேசத்தவராகிய மிஸ்டர் ஜகதீச சந்திரபோஸ் அவர்
கள் ஒரு யந்திரத்தின் துணையுடன் பிரத்யக்ஷமாகக் காட்டுகின்றார்,
இவைகளினாலே அறிவுள்ளவைகள் இவை இவை என்று இனிது
விளங்குகின்றதன்றோ'. ஆனால் மநுஷ்யர்களாகிய எங்களுக்கும் மற்
றைத் தேகிகளாகிய பிராணிகளுக்கும் உள்ள வித்யாஸம் என்னே.
நாங்கள் அறிவினாலடைய வேண்டியவை என்னே' என்பவைகளைச்சற்று
ஆராய்வது இப்போது அவசியமாகும். ஆத்மா விலங்கு பறவை
முதலியவைகளுக்கும்மனிதர்களுக்கும்இருக்கின்றது. ஆத்மா=உயிர்,
உயிரே இயங்கவும்; மரமுதலியன தளிர்க்கவுங் காரணமானது.
உயிரினாலே வேறுபாடில்லை. தேகங்களினாலே வேறுபாடு காணப்
படும். தேகங்கள் புண்ணிய பாவ பேதங்களால் உயர்ச்சியுந்
தாழ்ச்சியுமாகக் கிடைக்கும். அவ்வத்தேக வேறுபாட்டிற்கியைய
அறிவும் வேறுபாடுடையதாகும். எல்லாத்தேக ஜீவர்களையும்
ஒருங்கே தனித்து ஆராய்ந்தால், மநுஷ்ய தேகமுடைய நாங்களே
மேம்பாடுடையேம்." எதனால் மேம்பாடுடையேம்? தேக அமைப்
பாலும், அறிவின் கதிப்பாலுமேயாம். எப்படிப்பட்ட அறிவினாலே
என்னில்; பகுத்தறிவினாலேயாம். நன்மையுந் தீமையுமறிந்து நல்
லவழி நடக்கத்தக்கவர்கள் மனிதர்களே. இவ்வுண்மைகளை அநேக
நூல்களிற் காணலாம்; ஒவ்வொருவரும் அநுபவத்தினுந் தெ
ளியலாம். இலக்கண நூலினுள்ளதும், யாவரும் எடுத்துக்காட்டுவ
துமான ஒருபிரமாணம்உள்ளது. அது மக்கடாமே ஆறறிவுயிரே
என்பதாகும். (தொல்காப்பியம்.) மநுவிற்கு வேறாகவுள்ள அவ்வறிவு
இயற்கையறிவு, செயற்கையறிவு என இருதிறப்படும். ஆறாவதான
அறிவானது மனிதர்க்கன்றி வேறோர் பிராணிகளுக்குமில்லையென்ப
தையும், அவ்வறிவால் இப்பிறவியே மேலானதெனக்கருதி மனதை
தீயவழி நடவிடாது நன்மை நாடுதல் வேண்டும் என்பதையும்
மறந்துவிடலாகாது. அறிவு வளர்ச்சியை மாயை மறைக்கும்.
மாயை—தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணமாயது. மாயா மலத்தி
னாலே அஞ்ஞானத்துவம், பொய், மோஹம், அபர்வு, பைசாசுந்யம்
மாற்சரியம் ஆதியன உண்டாகின்றன. கல்லறிவு தலைப்பட்டால்

இந்திரியங்களை முற்றக்களைபவராம். நல்லறிவு கல்வியினாலேயுண்டாகும். கல்வியை 'இளமையிற்கல்' என்னும் ஔவையார் திருவாக்கை நோக்கிச் சிந்தித்துக் கற்றால் பேராக்கம் பெறலாம். கற்றற்குரிய நூல்கள் இலக்கணம், நிகண்டு, அந்தாதி, தருக்கம், சித்தாந்தம், வேதாந்தம் எனப்பல திறமுடையன. சைவத்தன்மை விளக்கும் பத்திரிகைகளைப் படித்தலும், மகோபந்நியாசங்களைக் கேட்டலும் அறிவு வளர்தற்கு ஏதுக்களாம். பாரதமாதாவின் மகிமையால் ஸ்ரீசுவாமி விவேகாநந்தர், ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே முதலிய தற்கால மகான்கள் அறிவின் மிகுதியினாலே சமயத்திற்கும் தேசம் பாஷை என்பவற்றிற்கும் தங்கள் தங்கள் வாழ்நாட்களைச் செலுத்திச் செய்த அருஞ்செயல்கள் ஒன்று, இரண்டா? அவ்விறந்த செயல்களால் அவர்கள் ஆக்கையுடம்பிறந்தபின் புகழுடம்பு நிலைத்திருப்பதையாரறியாதார்?

இவை நிற்க; அறிவைச் செலுத்துவதிலும் பாகுபாடுகளுள்ளன. ஆன்மசுகத்திற்குக் கடவுளுடைய திருவடிகளிலே பதிந்த மனமுடையராக நடக்குங் காலத்திலே வைதிக அறிவு என்றும் தேகசம்பந்தமாய்ச் செய்ய வேண்டியவைகளை ஜாஸ்தியாகப் புரியும் காலத்திலே லௌகிக அறிவு என்றும் அறிவு, இருவகைப்பாகக் கருதப்படுகின்றது. தேகசம்பந்தத்திலும் ஆன்ம சம்பந்தமான சற்கருமப் பிரவிர்த்தியே மிகவுஞ் சிறந்தது. தேகம் வேண்டாமா? என்றால், தேகம் வேண்டும். தேகத்தை நல்ல சுத்தமாக வைத்திருந்தாற்றான் ஆன்மாக்கள் சுகம் பெறலாம். அதனாலேதான் தேகத்தை ஆகாரம், நீர், காற்று, ஆகாயம் என்னுமிவைகளினாலே நோயுண்டாகாதபடி காத்துக்கொள்ள வேண்டும். சிலாஜலம், ஆகாயமென்னுமிவைகளைக் கண்டகண்டபடியே ஒரு ஆலோசனையுமில்லாது உண்டு அவஸ்தைப்படுகிறார்கள். தேகத்தைச் சௌக்கியமாக வைத்துக்கொண்டு அறிவைக் கடவுளிடத்துப் பதிதல் இலகுவாகுமன்றித், தேகம் நோயுற்றால், மனம் ஒருவிதத்திலும் பிரயோசனப்படாது. முதலாவதாக இதனையுடைய நாங்கள் கைக்கொண்டொழுகல் வேண்டும். இரண்டாவது இத்துர்லபமான பிரணவாகார தேகத்தையும்

அரியபெரிய அறிவையும் ஒருங்கே உதவித் திருவருளாலே பாது காத்தருளும் கடவுளை நாடோறும் வழிபாடு செய்தல் வேண்டும். தேகாநுபவப்பொருள்கள் ஈசுவர சந்நிதியால் எங்களுக்குக் கிடைத்துள்ளன. ஆகலின், அறிவின்பயன் அவ்விறைவனை எக்காலத்தும், எத்தொழிலினும் இடையீடின்றிச் சிந்திக்கையேயாம். தேகவுல்லாசமும், கலாஞான மகிமையும் அவ்விறைவனுக்கே அர்ப்பணஞ் செய்தற்பாலன. இவ்வுண்மையை

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்"

என்று ஒரு விசிட்டமான பாவினாலே திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளினார். அறிவின் பயனிதுவேயாம். இப்படி ஏன் சொல்லுவான் எனில்; கடவுளுடைய ஸ்வரூபமே அறிவினுடைய முடிவாகும் என அறிக. என்னை? முக்காலத்தும் ஒரேபெற்றித்தாகவிளக்கும் நிர்மலமான பரப்பிரமத்திற்கு ஸ்தானம் அறிவுடையவர்களின் பரிசுத்தமான மனமே யாகலினென்க.

சிலபிரமாணங்கள்.

வடநூலுள்.

யதைத மநுபஸ்யத்யாத்மாநம் தேவமஞ்சஸா ।
ஈசாநம் பூதபவ்யஸ்ய நதோ விஜுகுப்ஸதே ॥

தென்மொழியுள்;

அறிவறி வென்றங் கரற்று முலகம்
அறிவறி யாமை யாரு மறியார்
அறிவா யவற்றுளட் டாமறிவின்
செறிவாகி நின்றான் சிவனுமாமே.
அறிவுடை யார்நெஞ் சகலிட மாவது
அறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவது
அறிவுடை யார்நெஞ்சொ டாதிப்பி ரானும்
அறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் றானே.

என்பது முதலியனவாக ஆன்றோர் எங்கள் ஆன்மாக்களின் ஈடேற்றங்கருதி அருளிச் செய்தார்கள். நூன்முகமாக நாங்கள் அறிவதிலும் அநுபூதியாற் கண்டு ஆநந்திப்பதே உயர்வாகும். நூல் வழியாக நம்பிக்கை பெற்றலன்றி அநுபவிப்பது சாத்தியப்படாது. மூதறிய அறிவாளர்கள் அநுபூதியாற்கூறினமையால், நாங்கள் அவைகளைச் சிரவணஞ் செய்து அமைவு பெறவேண்டும். எவ்வளவு கற்றாலும் எவ்வளவு கேட்டாலும். மனம் அடங்காது. அதிலும் செல்வப் பெருக்கமுங் கூடினாற் சொல்லவும் வேண்டுமோ? கல்வியில்லாதவர்களுக்குச் செல்வம் சேர்ந்தால் விளைக்குந் துன்பம் இவ்வளவிற்றென்று கூறவே முடியாது. ஆகலின், முறையாகக் கல்வியைக் கற்றுச் சீலமாக நடக்க வேண்டும். வஞ்சனை, பொறாமை லோபம் என்னும் பெரிய சரக்குக் குடுக்கைகளாகித் தினந்தோறும் கொலை களவு கட்காமம் என்னும் மரங்களைப்புரிந்தால் அறிவு வளர்ச்சியடையமாட்டாது. அல்லதுஉம, தேகத்தையும், தேகத்துக்குஇன்பமான போகமாதரையும்நீக்கி கருமலங்கழிக்க வேண்டுமானால் அறிவாகிய திரியில் சாந்தமாகிய நெய்யைச் சேர்த்து ஞானதீபம் பெறஉள்ளத்தே உள்ளதை முன்னி வழிபாடு செய்வார்க்கு இனிய வியாபகத்துவம் சித்திக்கும். உள்ளது—கடவுள். இது திருவள்ளுவ நாயனார் "ஓர்த்துள்ள முள்ள துணரின் ஒருதலையாப், பேர்த்துள்ள வேண்டாபிறப்பு" என்றருளிச் செய்த விடத்துக் கண்டது.

### தேவாரம்.

*பொள்ளத்த காயமாயம் பொருளினைப் போகமாதர்*
*வெள்ளத்தைக் கழிக்க வேண்டில் விரும்புமின் விளக்குத்தூபம்*
*முள்ளொத்த திரியொன் றேற்றி யுணருமா றுணரவல்லார்*
*கள்ளத்தைக் கழிப்பர் போலுங் கடவூர் வீரட்டனாரே.*

இன்னும், அறிவைவளர்ப்பவரும்; அறிவுருவானவரும், அநந்த கல்யாண குணசம்பந்நராகிய கடவுளேயாம். ஆன்மபோதம் முன்னும் பின்னும் க்ஷாம நிலைக்குச்செலுத்துமன்றி அறிவை விளக்கி ஞேயமாநிலை காட்டாது. ஆதலினாலே சிவபோதம் வரச் செய்யு முண்மையறிவைக் கலைஞான வுணர்ச்சி கொண்டு ஸ்திரமுறச்

செய்தல்வேண்டும். கற்றோர் சரிவர அறிவைச் சீர்ப்படுத்திநடக்கின்றார்களோ என்னில், சற்குருவிடம் மாணவக முறையாகப் பயின்றோர்கள் என்றும் அறிவை விளக்கமாக்கியே நன்மை புரிவார்கள். கல்லார் அறிவைத் தாழ்ப்படுத்தி ஆணவத்தை மேற்படுத்தி நடப்பார்கள். வித்யாஸம் வேறில்லை.

ஸ்ரீவாகீசப் பெருந்தகையார்,

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகடலோடும் போது
மதனெனும் பாறைதாக்க மறியும்போ தறியவொண்ணா
துனையுனு முணர்வை நல்கா யொற்றியூருடைய கோவே.

என்று சிவபோதச் சிறுமை நீக்கமாகச் சிவபரம்பொருளைப் பிரார்த்திக்கின்றார், நாங்களோ அபிமானிக்க வேண்டியவைகளை வெறுக்கவே விரும்புவது, ஆராய வேண்டியவைகளைத் தக்க அறிவின்மையால் ஆராயாது அழுந்தி வருந்தும்போது ஆ! கூ! என்றும சிறுமையுட் சிறுமையான கர்மங்களை வளர்க்கின்றோம. அப்படிச் செய்யாது பெருஞ்சீர் விளக்கும் வழியில் அறிவைச் செலுத்தி னையுடன் கூடிய ஈனமாக தேகச்சுமை விடுத்து ஞானநாயகன் அறிவுருப்பெற முயற்சிப்பதே அறிவுடையார் கடமையாகும். இவ்வொரு விஷயங்களையும் இன்னுஞ் சிற்றறிவுக்கு எற்றவாறு எடுத்துக்கூறப் போதிய அவகாசமின்மையின் இவ்வளவிலே சுருக்கி முடிப்புரை கூற என்கருத்து. சபையாரும அதற்கு இணங்குவார்களென்று நம்புகின்றேன்.

## முடிப்புரை.

இது வரையுங் கூறப்பெற்றவற்றினை அறிவு இன்னது என்பதூஉம், ஜீவனுள்ளவைகளுக்கு மாத்திர மன்றிச், சிலலோக வஸ்துக்களுக்கும் ஒருவித உணர்ச்சி உண்டென்பதூஉம், மானுஷர்களாகிய எங்களுக்கே விசேஷித்த பகுத்தறிவு உண்டென்பதூஉம், அறிவினாலடைய வேண்டியது இறைவனது [illegible] நித்தியானந்த முக்தி நிலையே என்பதூஉம் இத்தகையடைதற்குப் பொருட்டு தேகமுள்ள பொழுதே அரிய தர்மங்களைச் சிரத்தையோடு செய்து

வரவேண்டும் என்பதூஉம், தேசம், பாஷை, சமயம் என்னும் இவை களை நோக்கிப் பேதப்படும்படி செய்வனவும் அறிவுடைமைக்கு அழகா கும் என்பதூஉம், அமைதியான மனமுடைமையினாலே அறிவு வள ர்ச்சியையும், அறிவு வளர்ச்சியினாலே புகழ் புண்ணியங்களையும் பண்டைக்கால மேதாவிகள் பெற்றுள்ளார்கள் என்பதூஉம், பிறவும் சுருக்கமாகப் பேசப்பட்டதென்பதை யாவரும் அறி ந்து, அறிவைக் கல்வியிற் செலுத்தி ஒழுகமுன்னிற்கும்படி இறை வனருளைப் பிரார்த்தித்து இவ்வளவிலே எனது பிரசங்கத்தை நிறை வுறச் செய்கின்றேன். இவ்வவையின் அக்கிராசனரையும் அபிமானி களையும் நீடுழிகாலம் இனிது நிலவச் சிவபரம்பொருளின் பூர்ண கிருபை யுண்டாவதாக.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>பிலவ ஹூ<br>சித்திரை மீ<br>கஉ | வ. மு. இரத்தினேசுவரையர்,<br>தமிழ்ப் பண்டிதர்<br>விவேகானந்தசபை<br>மாத்தளை. |

## வாணியன் தாதன்

### தொண்டைமண்டல சதகம்.

"பேணிய செந்தமிழ்த் தாதனுக் கேயன்பு பெற்றமையா
லுணிய கம்பன் சிவிகையுந் தாங்கி நயந்த தமிழ்
பூணிய நின்றதும் பொச்சாப்பிலாது புகுந்து பின்னும்
வாணியத் தாதற்குத் தாதானதுந் தொண்டை மண்டலமே"

### பொழிப்புரை.

விருப்பமிகும் செந்தமிழ்வல்ல தாதனுக்குத் தாமடிமைப் பட்டமையால், பாடுதற்கு நாணமுற்ற கம்பனது பல்லக்குச் சுமந்தும், யாவரும் விரும்புதற்குரிய தமிழ்ப்பாமாலை புனையப்பெற்றும், நிதி யில்லாது பின்னும் சென்று வாணியத்தாதற்கு அடிமைப்பட்டது மான வேளாளருடைமையால் தொண்டை மண்டலம் சிறந்தது.

### வரலாறு

தாதன் என்பவன் செக்கார் குலத்துதித்துக் கம்பர் காலத்துப் பெரும்புலவராய் விளங்கிய வாணியப்புலவன். இவன் கி. பி. 1070

முதல் 1118 வரையும் சோழநாட்டைப் பரிபாலித்த 1 குலோத்துங்க சோழன் அவைக்களஞ் சென்று தமிழறிவு மிகுந்த அச்சோழமன்னனைப் பலவகையினுஞ் சிறப்பித்துப் பாட, தாதன் புலமையின் அருமை பெருமைகட்குப் பெரிதுமனங்களித்த சோழன் அவனுக்குஊரும், பேரும் அளித்துத் திருச்சின்னமுதலிய விருதுவரிசைகள் தந்து பெருமைப்படுத்தினன். இதனைப்பொறாத கம்பர், தாதன் விஷயமாக அரசனை நோக்கி,

“கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப் பானக் குலக்கவிக்குக்
காளம் பிடித்திடிற் சின்னம் படுமன்னர் காதலியார்
* வேளம் பிடித்தகண் வெள்ளம் பிடிக்கவெம் பேய்க்கிளம்பே
தாளம் பிடிக்கத் தனிவேல் பிடித்த சயதுங்கனே” [ய்த்

(தமிழ்நாவலர்சரிதை)

எனப்பாடி இவ்வாறு தரமறியாது சன்மானிப்பது என்போன்ற சிறந்த உத்தமக் கல்வியாளரைச் சிறுமைசெய்ததுபோலாகும். இனி இவ்வாறு செய்யாதிருக்கும்படி வேண்டினன். இதுதெரிந்த வாணியத்தாதன் சினந்து, கம்பர்பாடிய மும்மணிக்கோவை என்னும் ஓர்நூலிற்குக் குற்றங்கூறி அவரையும் அவமதித்தனன். அது:—

† “கைம்மணிச் சீரன்றிச் சீரறியாக்கம்ப நாடன் சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழைமுனே வாளெயிற்றுப்
பைம்மணித் துத்திக் கணமணிப் பாந்தட் படம்பிதுங்கச்
செம்மணிக கண்பிதுங் கப்பதம் பேர்த்த செயதுங்கனே”

எனவருவதால் தெளிவாம். தாதன் சோழன் பால் மானியமாகப் பெற்றவூர் தொண்டைநாட்டின்கணுள்ள கூவம் என்ப. இது

(தொடரும்)
பின் 145-ம் பக்கம் பார்க்க

---

* வேள் அம்பு இடித்தகண் வெள்ளம்பிடிக்க = மன்மதனது அம்பைவென்ற கண்கள் நீர்த்துளிசொள்ள.

† கைம்மணிச்சீர்—கையின்மணியோசை. காளிகோயில் முதலியவற்றிற் பூசை புரியும் உவச்சமரபிற் கம்பர் பிறந்தவராதலின் இவ்வாறு வசைகூறினன். “சோணிசோழநாட்டுத் திருவழுந்தூருவச்சன” என்று ஏடுகளில் காணப்படும் இராமயணத் தனியன் பாட்டுமும் நோக்கற் பாலது. கம்பர்பாடியமும்மணிக்கோவை யாரைப்பற்றியதென்பது விளங்கவில்லை.

# மனத்தூய்மையும் பொது நன்மையும்.

பொது நன்மையென்பதொன்றே ஒரு நாட்டினை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரக் கூடியதாகும். ஒரு நாட்டிலுள்ள கற்றறிந்து அடங்கிய பெரியோரிற் சிலரே, அந்நாட்டின் பொது நன்மைக்கு உழைக்க முன்வருவதை நாம் பார்த்துவருகிறோம். மற்றும் பலர் அந்த வேஷம்போட்டுக்கொண்டு திரிவார்களேனும், அவர்களால் யாதொரு நன்மையும் உண்டாகாமலிருப்பதுடன், ஒருகால் தீமையும் நிகழ்வதாகின்றது. ஏனெனில், பொது நன்மைக்கு உழைக்கவென்று முன்வருவோர், கூடியவரையில் தமது ஆத்ம பக்குவத்திற்கேற்ப, தம்மிடம் சுயநயம் பாராட்டுதல், அகோராக சிந்தை, புறங்கூறுதல், கலகம் செய்தல், பிறன்மனைநயத்தல் முதலிய துர்க்குணங்கள் கொள்ளாமலிருக்க முயலவேண்டும். ஏனெனில், இவை ஒருவரது முன்னேற்றத்துக்கே தடைகளாக இருக்குமெனில், ஒரு நாடு முன்னேறும் வழியாகிய பொதுநன்மையுழைப்பில் தடை செய்யும் என்பதில் என்ன சந்தேகம்?

பொது நன்மைகளாவன:—ஒருநாடு முன்னேற வேண்டிய வழிகளாகிய ராஜ்யநிர்வாஹ நிர்ணய ஸபை, மதபோதக ஸபை, வித்தியாசாலை, ஏழைகளை முன்னுக்குக் கொண்டுவரும் ஸபை ஆகிய இவை, இவற்றுக்கு அதிகாரிகளாகவோ பிரசாரகர்களாகவோ உபாத்தியாயர்களாகவோ உபந்யாசகர்களாகவோ, இருப்பவர்கள், எப்போதும் எவ்விஷயத்திலும் மனத்தூய்மையுடன் உழைப்பவர்களாக இருக்கவேண்டும். மனமொன்றும் சொல் வேறொன்றும் செயல் இன்னொன்றுமாக இருந்தால், அவர்கள் எடுத்துக்கொண்ட காரியம் பயன் பெறாதிருப்பதுடன் அவர்களை நம்பிப்பின்பற்றும் பலபேர்களைக் கெடுக்கவும் ஆளாகிறார்கள். சிலர் எமது அந்தரங்க காரியம்

எப்படியிருக்காலென்ன? நாங்கள் ஏற்றுக்கொண்ட காரியத்தில் யாதொரு களங்கமில்லாமல் தானே உழைக்கிறோம் என்கிறார்கள். இவர்கள் தங்களது ஆத்மதர்மத்திற் பகிரங்கதர்மம் வேறாகவும் அந்தரங்கதர்மம் வேறாகவும் கவனித்து உழைத்து வருகிறார்கள்.

தமது ஆத்ம தர்மத்தை நிறுத்துக்கொண்டு ஒழுகாத ஒருவர், பொது நன்மைக்கு உழைப்பதற்குச் சற்றேனும் பொருந்தார் என்பது திண்ணமாகும். அவர் எப்போதும் ஒரு கூட்டத்துக்குத் தலைவராகவாவது மாணவர்கட்கு உபாத்தியாயராகவாவது இருத்தல் கூடாது. ஒரு தேசமானது ஒரு பொய்யராலாவது ஒரு மோசக்காரராலாவது ஒரு தூர்த்தராலாவது ஒரு கள்வராலாவது முன்னேற்றத்தை அடைந்துவிடும் என்று நினைப்பதற்கும் இடமில்லை. ஒரு தொழிலில் தேர்ச்சிபெற்றிருப்பது மாத்திரமே ஒருவரை ஒரு கூட்டத்திற்குத் தலைவராக இருந்து நடத்திவர பயனளியாது. நாம இப்போது மனிதர்களை மாத்திரம் தலைவராக வேண்டுகின்றோமாதலின், மனிதத்தரத்தின் பக்குவத்தையடையாதவரை நமது ஸபைகட்குத் தலைவராக நியமிக்கப்படாது. ஒழுக்கமின்மையேனும் வாய்மையின்மையேனும் நாணயமின்மையேனும் பெற்றிருப்பவரை நமது ஸபைகட்குத் தலைவராகக் கொள்ளப்படாது. அவர் தக்க ராஜதந்திரியாக இருக்கலாம். அவர் நல்ல வித்பன்னராக இருக்கலாம். அவர் நல்ல உபந்யாஸகராக இருக்கலாம். இவையிருந்தும், மெய்யும் ஒழுக்கமும் நாணயமும் இல்லாதவராயின், அக்கலைகள் அவர்க்கு, பாம்புக்கு வார்க்கப்பட்ட பாலாகின்றன.

தூர்த்தரும் பொய்யரும் ஒரு தேசத்தை முன்னுக்குக்கொண்டு வந்திருப்பதாக ஒரு சரித்திரத்திலும் படித்ததில்லை. தர்மம் ஒன்றே ஏழைகளைக்காத்து அவர்க்குப் பலமளித்து அவரையேற்றியவரால் அத்தேசத்தை முன்னுக்குக்கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறோம். ஆகையால் தர்மமொன்றையே நாடவேண்டும். தர்மமொன்றையே போற்றவேண்டும். வாய்மையில்லாவிடின் தர்மம் போற்றப்படாததாகும். ஒழுக்கமில்லாவிடின் தர்மம் போற்றப்படாததாகும். நாணயமில்லாவிடின் தர்மம் போற்றப்படாததாகும்.

நேர்ந்த மனம் அதர்மவழியைப் பின்பற்றப்படாது. தர்மம் ஒன்றே நிலையே முன்னேறவேண்டும் என்னும் நம்பிக்கையையுடைய நம் நாட்டின் இயற்கைக்கு மாறான தற்கால கல்விமுறையானது நாட்டினை அதாவது நாட்டின் மாணவர்களை அதாவது நாட்டின் தர்மத்தை சீர்கெடுத்துக் கொண்டிருக்கின்றது.

ஒழுக்கமே மதமென்று சொல்லப்படுவதுமாகும். ஏனெனில், மதமானது ஒழுக்கமில்லாவிடில் நிலைபெறாது. நமது தேசம் தாழ்வடைந்திருக்கிறது. இந்தத் தாழ்வு உண்டானதற்குக் காரணம் சாஸ்திரஞானம் இல்லாமையல்ல. யூகம் இல்லாமையல்ல. ராஜ்ய தந்திரம் இல்லாமையல்ல. இவையெல்லாம் நம்மவர் பெற்றிருக்கிறார்கள். ஒழுக்கம் ஒன்றுமே பலர்க்குக் குறைந்திருக்கத் தெரிகிறோம். ஒழுக்கமின்மையினால் உண்டாகக்கூடிய பல தீமைகளை அந்த சாஸ்திர ஆராய்ச்சிகள் சீர்திருத்த முடியா. சாஸ்திரஞானம் என்னும் உயர்ந்த கதவானது ஒழுக்கமென்னும் தாழினைப் பெறாதொழிந்தால் தேசநன்மையென்னும் நகரத்தைக் காக்கமுடியாது. ஒழுக்கம் உண்மை பெருமை இவையே தேசத்துக்குப் பொதுக் காவலாகும். இவற்றை உடைய ஒருவனே தனது தேசத்துக்கு மகோபகாரியாவான். இவன் சாஸ்திரஞானம் உபந்யாசவன்மை ராஜ்யதந்திரம் இவற்றைப் பெறாவிடினும், இவனொருவனையே நல்லவர் மனம் நாடிநிற்கும். நல்லவர் மனம் நாடும் என்பது ஒரு தேசமே நாடும் என்பதன்பொருளல்லவோ?

ஒருவரது அந்தரங்க தர்மம் அவரது பகிரங்க தர்மத்தைக் காட்டிவிடுமன்றோ? ஒருவன் தனது சொந்தக்காரியங்களில் பொய் பேசப் பழகியிருந்தானாகில், அவன் பொதுநன்மையில் மாத்திரம் அப்பழக்கத்தை ஒழித்தல் இயலுமா? ஒரு அவசியமும் அசாத்தியமுமான காரியத்தில் அவனை ராஜஸ குணம் தூண்டிவிட்டு சொந்தப்பழக்கமாகிய பொய்ப்பழக்கத்தை எழுப்பிக்கொண்டுவந்து விடாதா? ஒருவன் தனது அந்தரங்கதர்மத்தில ஒருபடியில் இருந்து விட்டுப் பொதுச்சபையில் ஏறினவுடனே மாத்திரம் புதுமனிதனாக மாறிவிடல்முடியுமா? திருத்தமடையாத அவனது இயற்கை

எங்கொளித்துவிடும்? ஒருவன் அந்தரங்க தர்மம் பஹிரங்க தர்மம் மத்திமாங்கதர்மம் என்னும் மூன்று கவசங்களை ஒரு நாளில் அணிந்து கொள்ளல் கூடுமோ? மனிதன் என்பான் ஒழுக்கம் அறிவு என்னும் சக்திகள் இணைந்து கூட்டப்பட்டவனல்லனோ? அவனது இயற்கையானது ஒரு யந்திரத்தின் ஜடமானகருவிகளைப் போன்ற அவயவங்களால மட்டும் இணைக்கப்பட்டதன்றே? பலம் ஆசை பழக்கம் ஒழுக்கம் என்னும் பௌதிகாம்சலேசமான பூர்வ ஜந்மவாசனைகளாலும் இணைக்கப்பட்டுள்ள தல்லவா? ஆகையினால் கண்ணியம்பெறாத அந்தரங்க தர்மமுடைய ஒருவன், பொதுதன்மையாகிய பஹிரங்கதர்மத்தில் கண்ணியத்துடன் உழைப்பான் என்று எப்படி நம்புதல் இயலும். அவனுடைய இயற்கை மாறுபட இடங் கொடாதல்லவா? ஒருவன் எவ்வளவுதான் தனது இயற்கையை யொளித்துச்செயற்கையால் மாறுவேஷம் போட்டு நின்றானேனும், ஒரு அசாத்திய நிலையில் அவனது இயற்கைக் குணம் வந்து தோன்றாமல் போகாதன்றோ? தேசப்பொது நன்மையென்பது கஷ்டசாத்தியமான காரியமல்லவா? எத்தனை இடையூறுகளை ஒழிக் தேறவேண்டியிருக்கும்? ஆகவின் இவ்விடையூறுகளில் மனம் தளராமல் இருக்கவேண்டுமே! தளர்ந்தால் ராஜஸமும் தாமஸமும் தலை கொள்ளுமே! அப்போது இயற்கைக் குணந்தானே வெளிப்படும் அன்றோ? இப்படி மாறுபட்டகுணமுடைய ஒருவரை வணங்கும்படி எப்படி நமதுமாணவரை ஏவத்துணிவோம்? ஒரு பொய்யனையாவது ஒருதூர்த்தனையாவது ஒரு கள்வனையாவது ஆசாரியனாகக்கொண்டு நமது மாணவர் பழக நாம் பார்த்திருக்கலாமா?

அந்தரங்க சுத்தம் அதாவது மனத்தூய்மை பெறாதவனென்பான் தன்னடக்கமில்லாதவனன்றோ? தானடங்காதான் தனபரை யடக்க மாட்டுவனா? அவனிடத்தில்தான் மாணவர் எப்படி அடங்கி நிற்பார்? இவனது கூட்டுறவு அந்தக் கூட்டத்தைக்கெடுக் காதா? இவன் தலைவனாக இருக்க நேருமாயின், இவனது கீழுள்ளோர் இவன் வழியையன்றோ பற்றுவர்? ஒருநாட்டுக்கோ ஒரு கூட்டத்துக்கோ தலைவன் என்பான், அந்த நாட்டிலும் அந்தக்

கூட்டத்திலும் இனிமேல் பிறக்கக்கூடிய குழந்தைகளின் குணத்திலுக்கும் உத்திரவாதிபலவன்றோ?

பெருந்தகைமை பற்றி வாழ்ந்திருந்த ஒரு தேசமானது சிறுதகைமைபற்றித் தாழ்வடைந்திருக்கும்போது, மாறுபட்ட இயற்கையுடையாரைத் தலைமையாகக் கொண்டால், முன்னேறி வரும் என்று எப்படி நம்புதல் இயலும்? மனிதர் இயற்கையைச் செயற்கையால் மாற்றி முன்னேறுவது என்பது ஒரு பெரியவரைப் பற்றியன்றோ? அப்பெரியவரால் மனிதர் தமது தீக்குணங்களை மாற்றி உண்மைதெரிந்து பெருந்தன்மை முதலிய கண்ணியமான ஒழுக்கங்களைப் பெறுகிறார்களென்பது உண்மையன்றோ? அங்ஙனமாயின், தாழ்வடைந்த தேசமொன்று முன்னேறுவதற்கு, அதன் இருதயஸ்தானமாக ஒரு பெரியவரையன்றோ பற்றவேண்டும்? அப்பெரியவர் என்பார் தமது மனத்தூய்மையால் நிறைகுணமுடையவரன்றோ? ஒரு தேசம் தாழ்வடைந்திருக்கிறது என்றால், அத்தேசத்து ஜனங்களில் பெரும்பாலார் சுயநயம் பாராட்டுதல் பயங்கொள்ளுந்தன்மை அறிவின்மை இவற்றில் ஆழ்ந்திருக்கிறார்களென்பது தெளிவன்றோ? அத்தேசத்தை முன்னேற்றுதல் என்றால் அத்தேசத்தில் உள்ள ஆண் பெண் என்னும் இருபாலாரிற் பெரும்பாலார்க்கு அவரது அழிந்த இருதயத்தை எழுப்பி அவரது மனோதர்மத்தை வேகப்படுத்தி அவரது மனம் செல்லக்கூடியதாகத் தக்கதொரு மார்க்கத்தைக் காண்பிப்பதன்றோ? அப்போது தானே மெலிந்தார் வலிவுகொள்வார்; தாழ்ந்தார் வாழ்வுகொள்வார். ஒரு தேசம் தன்னு ஜனங்களின் வாழ்வில் கலக்கத்தையடைந்திருக்கும் போது வியாபாரத்திலாவது ராஜ்யதந்திரத்திலாவது சிறந்து வாழ்வது எப்படியாகும்? தமது வீட்டு வாழ்க்கையில் மாறுபட்ட மனமுடைய ஜனங்கள் தமது நாட்டுவாழ்க்கையில் ஒத்துழைத்தல் இயலாத காரியமேயன்றோ?

ஒரு தாழ்வடைந்த தேசமானது தனது வாய்மை பரோபகாரம் தன்மறுப்பு இவற்றில் குறைந்தே இருக்கும். அது வாழ்வு

பெறுவதானது, அம்மூன்றையும் மறுபடியும் பெறுவதன்றோ? அதற்குத்தக்க தலைவனைப் பெற்றாலன்றோ அத்தேசம் அம்மூன்றையும் பெறமுடியும்?

ஒருவரது பயிற்சியும் ஆராய்ச்சியும் மாத்திரம், அவரது தலைமையின் கீழ் உள்ளவரைத் திருத்தவியலா. அவரது மனத்தூய்மை நன்னோக்கம் பெருந்தகைமை இம்மூன்றும் சேர்ந்து தூண்டும்போது பயிற்சியும் ஆராய்ச்சியும் மாணப்பெற்றுத் தமது காரியங்களைப் பயனுறுத்துகின்றன.

ஒருதேசமுன்னேற்றம் ராஜ்யதந்திரத்தாலும், ராஜ்யதந்திரம் நூலாராய்ச்சியாலும், நூலாராய்ச்சி கல்விப்பயிற்சியாலும், கல்விப் பயிற்சி வினயத்தினாலும், வினயம் ஒழுக்கத்தினாலும் ஒழுக்கம் பழக்கத்தினாலும் உண்டாகின்றன. அப்பழக்கம் நல்லதொரு பெரியாரிடம் கொள்ளப்பெறுவிடின் அனைத்தும் இன்றாய்விடும். ஆகவின், நல்லவரைத்தேர்ந்தெடுக்க வேண்டுவது அவசியம். உள்நாட்டுக் கலகம் பெற்ற ஒரு தேசம் உலகத்தில் உயர்ந்துவராது. உண்மை யறியாத ஜனங்களையுடைய தேசம் எப்போதும் உள்நாட்டுக்கலகத்தை ஓயாது பெற்றிருக்கும். உத்தமரோடு பழகாத ஜனங்கள் உண்மையையறிய மாட்டார்கள். உயர்குணமில்லாதோர் உத்தமராகார். உயர்குணமாவன உண்மை பரோபகாரம் தன்மறுப்பு என்பனவே. இக்குணங்களை அகங்காரம் சுயநயம் பேராசை என்னும்தோஷங்கள் கவர்ந்துகொள்ள எத்தனிக்கும். புகழிலும் பொருளிலும் வைத்திருக்கும் ஆறாத காதலே அம்மூன்று தோஷங்களையும் எழுப்புகின்றன.

பொய்யரையும் புறங்கூறுவாரையும் கள்வரையும் பெற்றுள்ள ஒரு தேசம் உலகில் உயரமுடியாது என்பது முன்னமே சொல்லப்பட்டது. ஒரு தேசத்துக்கு ஒழுக்கமே உயிராகவும், வியாபாரம் ராஜ்யதந்திரம் பாஷாஞானம் கூட்டுறவு என்பன அவயவங்களாகவும் இருக்கின்றன. ஒழுக்கமே அந்த அவயவங்களுக்கு வலிமை

தக்க நிலை நிறுத்துகின்றது. வியாபாரம் முதலியவையும் ஒழுக்கமுமே தேசத்துக்கு முக்கியமாக வேண்டியவை. ஆனாலும் வியாபாரம் முதலியவை ஒவ்வொரு பிரிவான நன்மையையே ஒரு தேசத்துக்குக் கொடுத்துதவும். ஒழுக்கமோ எல்லா நன்மைகளையும் தரும். ஒழுக்கமில்லாதவன் வியாபாரத்தில் புகுந்தால் நாணயத்தில் கெடுவான். ஒழுக்கமில்லாதவன் ராஜ தந்திரியானால் அரசனுக்காவது குடிகட்காவது மோசக்காரனாவான். ஒழுக்கமில்லாதவன் பாஷாஞானியாயினும் அவனிடத்தில் மாணவர்க்கு மரியாதை பிறக்காது. ஒழுக்கமில்லாதவன் கூட்டுறவிற்கு உழைப்பானாயினும் சுயநலத்தையே பாராட்டத்தலைப்படுவான்.

மனதின் ஒவ்வொரு அசுத்தத்தன்மையும் அதையுடைய மனிதனுக்கு ஒவ்வொரு குறைவை யுண்டுபண்ணியே நிற்கிறது. ஒரு துர்த்தனாயினும் ஒரு பொய்யனாயினும் ஒரு கள்வனாயினும் தனது மனத்தெழுந்த கெட்ட ஆசைகளை அடக்கமுடியாதவனாகின்றான். அவன் அந்தத்தாழ்ந்த சக்திகட்கு அடிமையாகின்றான். உலகில் கெடுமதிகொண்டு பாவத்தொழிலைச்செய்வார்க்கு இதுதான் காரணமாகிறது.

தேசத்தலைவர் என்பார், தாழ்ந்தசக்திகட்கு இடங் கொடாமல் உயர்ந்த சக்திகளையே உறுதியாகக்கொண்டு காற்றுக்கும் மழைக்கும் அஞ்சாத கப்பல்போலிருந்து தமது கஷ்டங்களாகிய சமுத்திரத்திலிருந்துத் தாம் கொண்ட கருமமாகிய கரையேறுபவரே யாவர். இவர்களே த்யாகி எனப்படுவாரும். இவர்கள் அழிந்தாலும் அழிந்து படுவரேயன்றி மானத்தை விழக்கமாட்டார்கள். தமது தர்மம் கெடுவது மானம் கெடுவது அன்றோ? தமது தர்மமாவது இவர்கட்குத் தங்களது தேசதர்மமேயாகும். ஆகையால், மனத்தூய்மை யில்லாதான் தேசதர்மத்தைக் காப்பாற்ற இயலாதவனே யாவான்.

ஒரு குடிகாரன் தலைவனானால் ஒரு குடிக்குத் தனது மரியாதையை இழப்பன். ஒரு சார்க்கதன் தலைவனானல் ஒரு ஸமிதிக்கு தன அதிகாரத்தைக் கெடுப்பான். ஒரு பொய்யன் தலைவனானால் ஒரு முக்கியவிஷயத்தில பொய்சொல்லிக் காரியத்தைத் தலைகீழாக்குவான். ஒரு புறங்கூறுவோன் தலைவனானல் எப்போதும் கலகத்தையே உண்டுபண்ணிக்கொண்டிருப்பான். தீர்த்தம் கங்காஜலமாயினது ஆயினும், அது சாக்கடையிற் போகும்போது கவனிக்கப்படுவதில்லை. அதுபோல உயர்ந்த அதிகாரிகளும் உயர்ந்த கொள்கைகளும் தாழ்ந்தவர்களைப் பின்பற்றியிருப்பின் கவனிக்கப்படமாட்டா. ஏனெனில் இவர் ஒழுங்கில்லாதவராதலினால், இவரது அதிகாரங்களும் உபதேசங்களும் கீழுள்ளாரது செவிகளில் அவர்கள் கவனத்தைப்பின்பற்றிச் செல்வதில்லை. இவர்களைச் சந்தேகத்துடனே கவனிக்கிறார்கள். இவர்சொல்வது உண்மையல்லவென்றும் வேஷமென்றும் அவர்களுக்குத் தோன்றுகிறது. ஆகையால் இவர்கள் பொதுநன்மைக்கு உரியராகாதவர் ஆகிறார்கள். ஒரு மனத்தூய்மை யில்லையானது எத்தனை சக்திகளையும் அழித்து அவற்றைப்பயனற்றவைகள் ஆக்குகின்றன!

ஆகையினால் மனத்தூய்மையே ஒழுக்கமென்று சொல்லப்படுகிறது. மனத்தூய்மையுடையாரே தேசத்தைத் திருத்தும் தன்மையுடையார். மனத்தூய்மையே பொது நன்மையைக் கைகூட்டித் தேசத்தைக் காக்கிறது, மனத்தூய்மை பெற்றவரே அரியபெரியகாரியங்களைச் சாதித்திருக்கிறார் என்று சரித்திரங்கள் முறையிடுகின்றன. ஒரு உயர்ந்த, யாரும்விரும்பும் நடத்தையே உலகத்தாரை யொருமைப்படுத்துகின்றன. ஒரு உயர்ந்தகுணமும் ஒழுக்கமு முடையான் எப்போதும் ஒரு கெட்ட தகப்பனாகவாவது ஒரு பொய்யான நண்பனாகவாவது ஒரு கபட உபதேசியாகவாவது ஒரு துரோகியாகிய ராஜதந்திரியாகவாவது மாறமாட்டான்.

"இடர்தீர்த்தல் எள்ளாமை கீழினம் சேராமை
படர்தீர்தல் யார்க்கும் பழிப்பே—நடைதீர்தல்
கண்டவர் காமுறும் சொல்காணில் கல்வியின்கண்
விண்டவர் நூல்வேண்டா விடும்".

பத்திராதிபர்.

(136-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்பொழுது திருவிற்கோலம் என்று மறுபெயர்வழங்கி சமயாசாரியர்களாற் பாடப்பெற்றுத் தொண்டைநாட்டு முப்பத்திரண்டு ஸ்தலங்களில் ஒன்றாய் விளங்குகின்றது. கம்பர், ஓர்கால் தொண்டைநாட்டில் யாத்திரை செய்தபொழுது தாதருக்கு அடிமைப்பட்ட கூவத்து வழியே சென்றாராக, அதுதெரிந்த அவ்வூரார், கம்பரையடுத்துத் தங்களைப்பாடுமாறு தாழ்ந்து பெரிதும் வேண்ட, அதற்குக்கம்பர் தாதனுக்கு அடிமைப்பட்ட கூவத்தைத் தாம் பாடுவதில்லையென்று மறுத்தனர். அவ்வூரார் அம்மட்டில் ஒழியாராகிக் கம்பர் சிவிகையை நெடுந்தூரஞ் சுமந்தும் அடப்பையிட்டும், வழிபட்டு நின்றதற்கு மனமுவந்து அவர்களைப்பாடினரென்ப. அது:—

"ஒவ்விய செந்தமிழ்த் தாதற் கடிமையவ லூரதனால்
நாங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப நாடன்சொல்ல
ஆங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடப்பை யிட்டுத்
தாங்கவி கொண்டது கூவத் தியாக சமுத்திரமே"

என்பதனாற்காண்க. கம்பரோடு ஒட்டக்கூத்தரை விரோதியாக்கிப் பிற்காலத்தார் கூறியகதைகளுக்கு "தமிழ்நாவலர் சரிதையிலேனும், சோழ பாண்டி கொங்குமண்டல சதங்க" ளிலேனும், இந்நூலிலேனும் ஆதாரங்கிடையாமையால், இவ்வாணியன் தாதனுடன் கம்பர்க்கிருந்த பகைமையையே அவ்வாறு மாறிக்கூறினர் போலும்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

---

## தீயநினைவும் அதன்பயனும்.

நினைவு அன்பு செய்கை விசுவாசம் என்னும் இந்நான்குமே ஒருவனை ஒரு பெருந்தன்மையான மனிதனாக்குவதற்கு உண்மையான அடிப்படைகளாக இருக்கின்றன.

மனிதரது மூளையே சூக்ஷ்மசக்தியாகிய மனதைக் காரியப் படுத்துதற்குரிய ஸ்தூல சக்தியாக இருக்கின்றது. அந்தச் சக்தி

யும் அவற்றின் செயலுமே ஒருவனது இயற்கையான குணங்களை நிச்சயப்படுத்திக் காட்டுகின்றன. அதிகமாகிய யோசனை செய்கிற மூளைக்கே, ரத்தச்சுழற்சியிலிருந்து ரத்தம் பாய்கிறது. இந்த இரத்தப் பாய்ச்சலினாலே மூளையானது போஷிக்கும் சக்தியைப் பெறுகின்றது. இந்தச் சக்தியே மனதைப் பலமுள்ளதாகவும் சுத்தமுள்ளதாகவும் செய்கிறது. இன்றைக்கு நமது எண்ணங்கள் நன்மையும் சூக்ஷ்மமுமாக இருந்தால்தான், நாளைக்கு நாம் நன்மையை எதிர்பார்க்கலாம்.

நாம் செல்வத்திலாவது புகழிலாவது பேராசைகொண்டு, ஒருவரது கெடுதியில் ஊக்கத்தைக் கொண்டோமானால், மூளையின பாகமாகிய பேராசை பறைக்கு மாத்திரம இரத்தம் சொரியப்பட்டு, அந்தச்சக்தி பலமடைந்து, தனது எதிரான சக்திகளாகும் பரோபகாரம் பெருந்தன்மை என்னும் இவற்றினை மேலோங்க விடாமல் அழுத்தி விடுகிறது. ஒரு வைத்திய சாஸ்திரத்தில பின்வருமாறு குறிக்கப்பட்டிருக்கிறது:—

“மூளையில் 64 அறைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் சாஸ்திரம் பயிற்சி அல்லது நற்குணம் தீக்குணங்களாகிய பழக்கங்கள் எனனும் இவற்றைக் குறிக்கின்றன. அறிவு முதிராத ஒரு வனசாரியுடைய மூளையில 64 அறைகளும்நிரம்பப் பெறாமலே இருக்கின்றன. எல்லாமறிந்த ஒரு ஞானியினது மூளையில 64 அறைகளும் நிரம்பி யிருக்கின்றன. ஆயின் பின்னவரது மூளையில் உள்ள தீக்குண அறைகள் உருத்தெரியாமல அழிந்து கிடக்கின்றன.”

எனவே, மூளையை அதாவது நமது நினைவை எவ்வளவுக் கெவ்வளவு கலகத்திலும் கலக்கத்திலும் செலுத்தாமல் இருக்கின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு நமது மனமும் ஸத்ப்ரவ்ருத்தியில் புகும் என்பது பெற்றோம். அப்போதே நாம் முயன்று படித்தவை யெல்லாம் அவற்றுக் கேற்ற பயனைத் தருவனவாகும்.

ஒரு இளைஞன் காம நினைவைச் சிற்றின்பங்களிலேயே செலுத்திவந்தானானால், அவன் அவற்றுக்கேற்ற தீக்குணங்களின் சக்திகளையே மூளையில் பெருக்கிக் கொண்டவனாகிறான். அதனால், அந்தச் சக்திகளை யடுத்துள்ள நற்குணங்கள் வளர்க்கப்பெறாமல் அழிவை யடைகின்றன. ஏறப, மனதும் ஸத்ப்ரவர்த்திகளை மறந்துவிடுகிறது. படித்த படிப்பினால் வேஷம் போட்டுக்கொண்டவனாயினும், அவனை அவமானமான கோபத்திலும் பொறாமையிலும் பிரவர்த்திக்கும்படி செய்து தன்னழிவு பிறர்கேடுகளுக்கும் இலக்காக ஆளாக்கிவிடுகிறது.

மூளையின் சக்திகளும் நரம்புகளின் வலிமையும் இளமையிலேயே முக்யமாகச் சேகரிக்கப்படுகின்றன. அக்காலத்தில் அவைகள் சரிவர வளர்க்கப் பெறாவிட்டால், முதுமையில் திருத்தமடைதல் சிரமமாகும். தமிழ்நாட்டின் அருமைத் திருவாசகமாகிய "இளமையிற்கல்" என்னும் சூத்திரம் இது பற்றி எழுந்ததாகவும் குறிக்கலாம்.

மூளையின் சக்திகளை அடிக்கடி உண்டாகும் நினைவுகளினால் பழக்கத்துக்குக் கொண்டுவருவோமானால், அந்தந்த ப்ரவர்த்திகளில் மனது கலையாமல் நின்று உறுதிபெறும். அப்போது செய்கை பலப்படும். ஆனால், எண்ணங்கள் மாத்திரம் நன்மையானவைகளாக இருக்கவேண்டும். இல்லாவிடின், நாம் அழிவதற்கு இன்னொருவர் பிரயத்தனப்படவேண்டாததாகும். "நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமை விளையும்." இது இதனையே வற்புறுத்துகின்றது. நினைவால் செய்கையும், செய்கையால் பழக்கமும், பழக்கத்தால் குணமும், குணத்தால் பெருமையும், பெருமையால் வாழ்வும், வாழ்வால் களிப்பும் பெறுகிறோம். நினைவு மாறின் களிப்பே இல்லை. களிப்பும் கண்ணியமும் ஒருவரது நிலையினால் பெறலாகா. ஆயின் அவரது நினைவினாலும் செய்கையினாலுமே பெறலாகும். தீயநினைவால் அவமானமும் நல்ல நினைவால் கண்ணியமும் பெறுகிறோம்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" திருவள்ளுவர்.

தருமம் பற்றிய தக்கவர்க் கெல்லாம்
கருமம் கட்டளை யென்ப கட்டதே" கம்பர்.

"நன்னிலைக் கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்" நாலடியார்.

ஆதலால்,

தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்" நாலடியார்.

பத்திராதிபர்.

---

## மித்திரர்களுக்கோர் விக்ஞாபனம்.

நாட்டரசன் கோட்டையில் ஸ்ரீ வெங்கிடேசப் பெருமாள் ஸன்னிதிக்கு முன்பாக ஷையூர் அரு. சு. வே. காசிவிஸ்வநாதன் செட்டியார் துவாதசிமடம் காம்பவுண்டில் இதற்கென்று அமைத்திருக்கும் கட்டிடத்தில் நகரத்தார்களின் முயற்சியின் ஊக்கத்தால், "வித்தியாபரிபாலன ஸங்கம்" நாளது வைகாசிமீ ௨௨ (2-5-517) சுக்கிரவார சுபதினத்தில் மிகவும் விமரிசையாய் நடைபெறும். திறப்புக் கொண்டாட்டம் வைகாசிமீ 22, 23 (ஜூன்மீ 4, 5வ) தேதிகளில் உபந்யாச முதலியவைகள் கற்றறிந்த சான்றோர்களால் நடைபெறும்.

நாட்டரசன்கோட்டை,
வைகாசிமீ 6உ.

இங்ஙனம்
நகரத்தார்.

## சாது சங்கடகாசபை.

## தொழில் அபிவிருத்தியைப் பற்றித் தொழிலிலாகாத் தலைவர்.

### ஜப்பானும் சென்னை மாகாணமும்.

ஜப்பானி லிருந்து சமீபத்தில் திரும்பிவந்த நெசவுத்தொழில் நிபுணரான மிஸ்டர் டி. ஏ. ராமஸ்வாமி ஆச்சாரி, சேத்துபட்டை பச்சையப்பன் ஹாலில், தொழிலிலாகாத் தலைவரான மிஸ்டர் இன்னெஸின் அக்கிராசனத்தின் கீழ், "ஜப்பானில் நெசவு தொழில்" என்ற விஷயத்தைப்பற்றி ஒருபன்யாசஞ்செய்தார். உபந்நியாசகர் எழுபது வருஷ ஜப்பானில் நெசவுத்தொழில், பூர்வகாலம் முதல் காலை வரையில் எப்படி அபிவிருத்தியாயிற்றென்ற விஷயத்தைப் பற்றி நன்கு விளக்கினார். அபிவிருத்திக்குக்காரணம் ராஜாங்கத்தினரின் உதவியும் வேறு பல சந்தர்ப்பங்களுமேயாகும். சென்னையில் நெசவுத்தொழில் அபிவிருத்தியடைய வேண்டுமானால், கவர்ன்மெண்டார், அத்தொழிலுக்கு நேராகவும் வேறுமூலமாகவும்உதவி செய்துவரவேண்டும். அவ்வித ஸ்கூல்களை ஸ்தாபிக்க வேணடும், தொழிலாளிகளைப்பயிற்சி செய்விக்கவேண்டும். மாதிரித் தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கவேண்டும். கிராமாந்தரங்களில் தொழிலுக்கு உதவிசெய்து வரவேண்டும் என்று பேசிமுடித்தார்.

மிஸ்டர் இன்னெஸின் பேசசு:—ஜப்பானியர்கள் அற்புதமான வேலைகளைச்செய்து முடிக்கும்சாமார்த்திய முள்ளவர்கள் என்றவிஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. முக்கியமாக விவசாயத் தொழிலுக்கென்றே ஏற்பட்ட அவர்களுடைய தேசத்தை சென்ற 50 வருஷகாலத்திற்குள் கைத்தொழிலும், வியாபாரத்திலும் சிறந்த தேசமாக மாற்றியிருக்கும் அவர்களுடைய சாமர்த்தியத்தை என்னவென்று சொல்லுவது. இவ்விதமாக அவர்கள் எப்படி மாற்றினார்கள் என்ற விஷயத்தைப்பற்றி நான் உங்களுக்குச சொல்லுகிறேன். படிப்பில்லாத குடும்பம், எககிராமத்திலும் இருககககூடாது. படிப்பில்லாத ஒருவன் எந்தக் குடும்பத்திலும் இருக்ககூடாது. இவ்விதமாகப்படிப்பை அபிவிருத்தி செய்யும்படியாக ஜப்பானில் ஏற்பாடு செய்யப்பட்டது. மேனாட்டாரின் முறைப்படி தொழில்கள் அனுஷ்டிக்கப் பட்டு வந்தன. கவர்ன்மெண்டார் பட்டு நெசவுமில் ஒன்றையும், கம்பளித் தொழில் சாலையையும், கண்ணாடித் தொழிற்சாலையையும், காகித மில்லையும், வேறு பலமாதிரித்தொழிற்சாலைகளையும் ஸ்தாபித்தார்கள். அன்னிய தேசங்களிலிருந்து நிபுணர்களை வரவழைத்தார்கள். சுரங்கங்களில் வேலைசெய்வதற்காக அன்னிய தேசங்களிலிருந்து 80 நிபுணர்கள் வரவழைக்கப்பட்டார்கள். பிறகு 1890-ம் வருஷத்தில்

தொழிற் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இது சித்திபெறவில்லை. பிறகு ஜப்பானுக்கும் சீனாவுக்கும் யுத்தம் ஆரம்பமாகி முடிந்ததின் பேரில், தொழிற் படிப்பை அபிவிருத்திசெய்ய வேண்டுமென்ற அவசியத்தை ஜப்பானியர்கள் உணர்ந்தார்கள். 12 வருஷ காலத்திற்குள் அதாவது 1902ம் வருஷம் முடிவில் ஜப்பான் தேசத்தின் ஏற்றுமதி 50 லக்ஷம் பவுனிலிருந்து 2 கோடியே 5 லக்ஷம் பவுனாக உயர்ந்தது. பிறகு ருஷியாவுக்கும், ஜப்பானுக்கும் நேர்ந்த சண்டையினால், தொழில் அபிவிருத்தி இன்னும் அபிவிருத்தி யடைந்தது. இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் மஹாயுத்தத்தினால் ஜப்பானியர்கள் கிரம்ப முன்னேற்ற மடைந்து வருகிறார்கள். சில கைத்தொழில்களுக்கு கவர்ன்மெண்டார் நேராகப் பண உதவி செய்துவருகிறார்கள். தொழில் சாலைகளை கவர்ன்மெண்டார் ஸ்தாபித்து நடத்திவருவதுமல்லாமல் தொழில் நிபுணர்களை தேசமெங்கும் அனுப்பி, ஜனங்களுக்குப் போதிக்கும்படிச்செய்து வருகிறார்கள். மாணாக்கர்களையும் வியாபாரிகளையும் அன்னிய தேசங்களுக்கு அனுப்பி, உயர்தரப் படிப்பைக் கற்றுக்கொண்டு வரும்படிச் செய்கிறார்கள். கவர்ன்மெண்டார் முயற்சியினாலேயே சென்ற 50 வருஷ காலத்திற்குள் ஜப்பான், தொழிலில் இவ்வளவு அபிவிருத்தி யடைந்திருக்கிறது.

சென்னையைப்பற்றி யோசிக்குமிடத்து நேர் விரோதமாயிருக்கிறது; கேட்பதற்கே மனதிற்கு வருத்தத்தை யுண்டுபண்ணக் கூடியதா யிருக்கிறது. சமீப காலத்தில் கொஞ்சம் அபிவிருத்தி முகம் காட்டி வந்தது. அதையும் ஜப்பானின் அபிவிருத்தியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சென்னையின் அபிவிருத்தி ஒன்றுமில்லை என்றே சொல்லலாம். ஜப்பான் கவர்ன்மெண்டாரின்வழியைச் சென்னையில் அனுஷ்டித்து வருவது நலமாகும். அம்முறைகளைக் கற்க வேண்டியது என்னுடைய முக்கிய கடமையாகும். சென்னையும் ஜப்பானைப் போல விவசாய நாடுதான். சென்னையின் விஸ்தீரணமும் ஜப்பானின் விஸ்தீரணமும் ஒன்றே. ஜப்பானில் பொன் வெள்ளி இரும்பு தாம்பிரம் ஈயம், கந்தகம் முதலிய கனிஜ வஸ்துக்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. சென்னையிலோ அவ்வித கனிஜவஸ்துக்கள் இல்லை. சென்னை ராஜதானியைச் சேர்ந்த சேலம் முதலிய ஸ்தலங்களில் இரும்பு ஏராளமாக அகப்படுகிறது. கனிகளில் வேலை நடத்தப்படுவதற்கு வேண்டிய நிலக்கரி கிடைக்கிறதில்லை. ஜப்பானில் வருஷாதோறும் பத்து லக்ஷக்கணக்கான டன் நிலக்கரி உற்பத்தியாகிறது. ஏராளமான எண்ணெயும் உற்பத்தியாகிறது.

சென்னை ராஜதானி முழுவதிலும் நிலக்கரியும் இல்லை, எண்ணெயும் இல்லை. இப்படி யிருக்க, சென்னை ராஜதானியில் தொழில் அபிவிருத்தியாகவில்லையே என்று சொல்லுவதில் பிரயோஜன மென்ன? பம்பாயில் இயற்கை

யான துறைமுகம் இருக்கிறது. அங்கே இருக்கும் பார்ஸிகளுக்கும் பம்பாய் மகமதியர்களுக்கும், கைத்தொழிலையும் வியாபாரத்தையும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் அபிலாஷை இருக்கிறது. இங்கே, சென்னையிலோ, படிப்பாளிகளும் கவர்ன்மெண்டு உத்தியோகத்திற்குப்போகவேண்டுமென்ற அபிலாஷை கொண்டவர்களாக இருக்கிறார்கள். தொழிலில் அபிவிருத்தி ஆக ஆக, தொழிற்சாலைகள் பல ஏற்படும். அப்பொழுது தொழிலில் பயிற்சி பெற்றவர்களின் உதவி அதிகமாக வேண்டியிருக்கும். அதற்குத் தயாராக பலர் இருப்பார்கள். தொழிற்சாலையில் அனுபவம் இல்லாதவர்களின் தொழிற்படிப்பு பிரயோஜனப்படாது.

முதலில் நமது தொழில் தலையெடுக்கவேண்டும். அப்பொழுதான் தொழிற் படிப்பு அபிவிருத்தியாகும். இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டாரே அதிகமாக ஒன்றும் செய்ய முடியாது. ஜனங்களும் கவர்ன்மெண்டாருடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். பணம் இல்லாமல் தொழில்கள் ஸ்தாபிக்கமுடியாது. தொழில்களில் ஜனங்கள் பணத்தைப் போடப் பின் தாங்கினால், அபிவிருத்தி மெதுவாகத்தான் ஆகும்.

சென்னையில் யுத்தக்கடனுக்கு ஏன் ஜாஸ்திப் பணம் சேரவில்லை? இதற்குப்பதில் சொல்லுவது அதிக கஷ்டமில்லை. சென்னையில் ஜனங்கள் பணத்தை பூமிவாங்குவதிலும் வட்டிக்குக் கடன் கொடுப்பதிலும் உபயோகப் படுத்தி வருகிறார்கள். இவ்விரண்டு விஷயங்களில் நன்மை அதிகமில்லை. நான் என்னுடைய உபந்நியாசத்தைவிஸ்தரித்து விவரித்து முடித்து இன்றைய தினம் எடுத்துக்கொண்டிருக்கும் உபந்நியாச விஷயத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தையைச் சொல்லி முடிக்கிறேன். உபந்நியாசகர் சொன்னபடி ஜப்பானில் பெரிய நெசவு மில்லுகள் இருந்த போதிலும் அவைகளுக்குப் பக்கத்தில் கைத்தறி யந்திரங்கள் இருந்து வருகின்றன. விசைகாட்டுத்தறியைவிட கைத்தறிகள் நிரம்பப் பிரயோஜனமானவைகள். இதை யறிந்தே இங்கிலாந்தில் சமீபகாலத்தில் கைத்தறிகள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. ஜப்பானிலும் அப்படித்தான் இருக்கிறது. கைத்தறித் தொழில் அபிவிருத்தியாக வேண்டுமானால் அதைச் சரியாக நடத்துவதற்கு போதுமான ஒழுங்கு ஏற்படவேண்டும். ஜப்பானில் கைத்தறித்தொழில் சரியாக நடத்தப்பட்டு வருகிறது. சென்னையில் அதை எப்படிச்சரியாக நடத்துவது என்பதுதான் பிரச்னை.

ஜப்பானில் நெசவுக்காரர்கள் சுருசுருப்பாயும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டவர்களாயும், சாமர்த்தியசாலிகளாயும் கடனுக்கு உட்படாதவர்களாயும் இருக்கிறார்கள் என்று உங்கியாதகர் சொல்லியிருக்கிறார். இங்கே சென்னையிலேயோ, நெசவுத்தொழிலாளிகளுள் சிலரைத் தவிர மற்றவர் படிப்பில்லாதவர்களாயும் குடிவழக்கத்தை அனுஷ்டிப்பவர்களாயும் இருப்பதும் தவிர, வட்டிக்குக்கடன்கொடுப்பவர்களிடம் சென்று, வட்டிக்குக் கடன் வாங்குகிறவர்களாயும் இருக்கிறார்கள். இதற்குப்பரிகாரவழி என்னவெனில், கல்வி கற்பித்து வருவதும் ஒற்றுமையுணர்ச்சி முயற்சியை ஆதாரமாகக்கொண்டு அதின்படி அவர்களை நடத்தும்படி செய்து வருவதுமாகும். இந்த விஷயத்தைப்பற்றி மிஸ்டர் ஸ்வாமிக்கண்ணு பிள்ளையும் நானும் கடிதப் போக்குவரத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். என்று மிஸ்டர் இன்னெஸ் பேசிமுடித்தார்.

---

## மதிப்புரை.

---

கல்வி:—இது, ஒரு மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இது இந்தச் சித்திரை முதல்தான் மதுரையிலிருந்து பிரசுரமாகி வருகிறது. இதனை நடாத்துபவர் கல்வியிற்சிறந்து பரோபகாரத்திற் பெருத்த ஆர். எஸ். நாராயணசாமி அய்யர், பி. ஏ., பி. எல். கல்வியின் ஏற்றத்துக்கு இன்றியமையாத பலவியாஸங்கள் பல மேதாவிகளால் எழுதப்பெற்று உலாவுகிறது. சில சித்திரப்படங்களும் அமையப்பெற்றிருக்கிறது. இதன் வருஷச்சந்தா இந்தியாவுக்கு ரூபாய் ஒன்றேதான். இந்தக்காலத்தில இதனை இப்படிக்கொடுப்பதும் தேசோபகாரத்தின் நிமித்தமேயன்றி வேறன்று என எண்ணுகிறோம்.

தொழில்.—சென்னையிலிருந்து பிரசுரமாகிவந்த "விச்வகர்ம குலோபகாரி" என்னும் மாதாந்தப் பத்திரிகையானது இந்த மாதம்முதல் இப்பெயர் கொண்டு உலாவுகிறது என்று இதன் ஆசிரியர் எழுதுகிறார். இதன் பெயருக்கேற்ப இதனுள் தொழிற்கல்வியே மிகுதியும் எழுதப்பெற்றிருக்கின்றன. அவற்றுளும் தீர்குச்சி செய்வதற்கான யந்திரம் என்னும் வியாசம் அவசியம் படிக்கப்பட்டு அதற்கேற்ற முயற்சியும் தேடப்பெறல்வேண்டும்.

பெண்கல்வி.—இது வழக்கம் போல் இம்மாதமும் நல்ல வியாஸங்கள் எழுதப்பெற்று விளங்குகின்றது.

அறிவின்பயன் யாது? இது, யாழ்ப்பாணத்து உடுவில் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் வ. மு. இரத்நேசுவரையரால், தேவகோட்டை வைசியசிவானந்தசபையின் மூன்றாவது வருஷோத்சவத்தின் காலத்தில் செய்யப்பெற்ற பிரசங்கத்தின் சாரமாகும். அறிவின்பயனை நன்குவிளக்கி இகபரசாதகத்தைத் தரத்தக்கதானதொரு ஸாதனமாக இருக்கிறது. இதனுள் ஆசிரியர் (1) ஆத்மா உண்டென்பது (2) ஆத்மா இது என்பது (3) ஆத்மாவும்வேறு பரமாத்மாவும் வேறு (4) ஆத்மாவின் பிரமாணம் (5) ஆத்மலக்ஷணம் என்றிப்படியாகப் பதினொரு விஷயங்களை எடுத்து நன்கு உபந்யசித்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் படிக்கத்தகுந்ததேயாகும். இப்படியாக வித்துவான்களது அருமைத் திருவாக்கினின்றும் அவ்வப்போது எழும் உபந்யாஸங்களைப் புத்தகரூபமாக்கித் தந்து உலகத்தாரை உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டுவதும் உத்தமர் கடமைகளில் ஒன்றாகும்.

---

## தர்பாரவர்களால் விளம்பரம்.

---

மஹா-ா-ா-ஸ்ரீ மஹாராஜா அவர்களுடைய ஆக்ஞையை ஒத்து ஸமஸ்தானத்திலுள்ள கிருஷிகர்களுடைய வாலிபப்பிள்ளைகளை வியவஸாய அபிவிர்த்தியில் பழக்கச்செய்ய ா-தர்பார் அவர்கள் ஓர் வியவஸாய பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க உத்திரவு செய்திருக்கிறார்கள். அதைக்குறித்த நிபந்தனைகள் அடியில் காட்டப்பட்டிருக்கிறது.

பள்ளிக்கூடம் இந்த வருஷம் ஜூலைமீ 1௳ முதல் ஆரம்பிக்கப்படும். மேமீ 31௳க்குள்ளாக பள்ளிக்கூடத்தில் சேருகிறதற்கு மனுக்கள் அனுப்பப்படவேண்டியது.

“புதுக்கோட்டை ஸமஸ்தானம் வியவஸாய பள்ளிக்கூடம்”

இடம்.—இச்சமஸ்தானத்தைச் சேர்ந்த புதுக்கோட்டை டவுனில் ஏற்படுத்தியிருக்கும் ஸ்டேட் வியவஸாயப்பண்ணையில் மேற்படி பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படும்.

ஆதீனம்.—மேற்படி பள்ளிக்கூடமானது திவான்பேஷ்கார் அவர்களுடைய ஆதினத்துக்குள்பட்டு ஸமஸ்தானத்தின் வியவஸாய டிபார்ட்மெண்டினால் நடத்தப்பட்டு வரும்.

**கொள்கை.**—கிருஷிகர்களுடைய வாலிபப்பிள்ளைகளை சாமர்த்தியமாகவும் மிகவும் புத்திசாலித்தனமாகவும் பயிரிடக்கூடியவர்களாகச் செய்யும் பொருட்டு இந்தப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வியவஸாயத தொழிலை நன்றாயறியும்பொருட்டு எவ்வளவு சொல்லிக்கொடுக்கவேண்டுமோ அவ்வளவு மட்டில் பத்திரிகை மூலமாய் சொல்லிக்கொடுக்கப்படும். ஆனால் வியவஸாயத்தைக்குறித்த எல்லா விஷயங்களும் செய்கை மூலமாய சொல்லிக்கொடுக்கப்படும்.

**படிப்பின் காலம்.**—மேற்படி படிப்பானது இப்போதைக்கு ஒரு வருஷத்துக்குள் கற்றுக்கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடமானது பிரதி வருஷமும் ஜூன் மாதம் முதல்வாரத்தில் ஆரம்பிக்கப்படும். பின்வருமாறு மூன்று தடவைகளில் படிப்பு சொல்லிக்கொடுக்கப்படும்.

முதல் தடவை—ஜூன்மீ முதல் நவராத்திரி வரையில்.
இரண்டாவது தடவை—நவராத்திரி முடிந்தது முதல் டிஸம்பர்மீ வரையில்
மூன்றாவது தடவை—ஜனவரிமீ முதல் ஏப்ரல்மீ வரையில்.

**அட்மிஷன்.**—ஒரு வருஷத்திற்கு 12 பையன்கள்தான் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படுவார்கள். ஆனால் ஸமஸ்தானத்தில் யார் யார் நிலங்களை வைத்துக்கொண்டு வியவஸாயத்தைக்கவனித்து வருகிறார்களோ அவர்களின் பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்வதில் முதலில் கவனிக்கப்படும. பள்ளிக்கூடத்தில் சேருவதற்கு பிள்ளைகள் தாசில்தார் மூலமாக இத்துடன் அடக்கியிருக்கும் A-பாரத்தில் கண்டபடி மனுச்செய்துகொள்ளவேண்டியது. தாசில்தார்கள் திவான்பேஷ்கார் அவர்களுக்கு மேமீ 31உக்குள்ளாக மேற்படி மனுக்களை அவர்களுடைய சிபார்சுகளுடன் அனுப்பவேண்டியது. மனுதார்கள் பிரைமெரி பரீக்ஷை ஸர்டிபிகேட்டாவது பெற்றிருக்கவேண்டியது.

ஸமஸ்தானத்தில் வியவஸாய அபிவிர்த்தியில் ஊக்கமுள்ளவர்களுக்கும், ஸமஸ்தானத்திலுள்ள Training School மாணாக்கர்களுக்கும் ஸ்பெஷலாய் இப்பாடம் சொல்லிக்கொடுக்கப்படும்.

**படிப்பின் விவரம்.**—படிப்பு சொல்லிக்கொடுப்பதற்குரிய விதிகள் B-பாரத்தில்காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால்சொற்பமாறுதல்கள் அவசியமாயிருந்தால் அப்போதைக்கப்போது செய்யப்படும். வியவஸாயத்தொழிலில் செய்து காட்டக்கூடிய பாடங்களில, உழுவது, விதைப்பது, பயிர் நடுவது இவைகளையும் இன்னும் இவைகளைப்போன்றவைகளையும் மாணாக்கர்களே செய்ய வேண்டியதாயிருக்கும்.

சம்பளம்.—படிப்பு சொல்லிக்கொடுப்பதற்கு சம்பளம் வசூலிக்கப்பட மாட்டாது. மேலும் ஒவ்வொருமாணாக்கருக்கும் மாதம் 1-க்கு ரூ 6-வீதம் Stipend (உபகாரச்சம்பளம்) கொடுக்கப்படும். பிற்பாடு சௌகரியங்களை ஏற்படுத்திக்கொண்டு மாணாக்கர்களுக்கு Stipend-க்கு பதிலாக இனமாக இருப்பதற்கு இடமும் சாப்பாடும் உபாத்தியாயர்களுடைய பாராமரிகையில் ஏற்படுத்தப்படும்.

விடுமுறை நாட்கள்.—கெஜட்டில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் விடுமுறை நாட்களெல்லாம் கூடியவரையில் விடுமுறை நாட்களாகவே அனுஸரிக்கப்படும். மேலும் வருஷத்துக்கு மூன்று தடவை வெகேஷன் உண்டு.

(1) தஸரா விடுமுறை நாட்கள்.
(2) கிரிஸ்ட்மஸ் விடுமுறை நாட்கள்.
(3) கோடை விடுமுறை நாட்கள்.

மாணாக்கர்கள் எல்லோரும் ஒவ்வொரு வகுப்புக்கும் தவறாமல் சரிவரப் போய்க்கொண்டு வருகிறார்களா என்று கண்டிப்பாய் கவனிக்கப்படும்.

A. பாரம்.

புதுக்கோட்டை ஸமஸ்தானம் வியவஸாய பள்ளிக்கூடத்தில் சேருவதற்கு மனு.

I. மாணாக்கரின் பெயர்—
2. இருப்பிடம் கிராமம் தாலுக்கா—
3. மாணாக்கரின் ஜாதி—
4. மனுச்செய்யும்போதுள்ள வயது—
5. மாணாக்கரின் குடும்பத்துக்கு சொந்தமான நிலம் } (1) விஸ்தீரணம். (2) நிலம் இருக்குமிடம்.
(6) மாணாக்கரால் தேரப்பட்டிருக்கும் பரீக்ஷைகள். } (1) என்ன பரீக்ஷை. (2) எப்பொழுது. (3) எவ்விடத்தில்.
(7) தகப்பனாரின் தொழில்—

மாணாக்கரின் கையெழுத்து.

B. பாரம்.

பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கும் பாடங்களின் அட்டவணை.

(1) கணிதம், பூகோளசாஸ்திரம் (பூமியின் அமைப்பு), பொருள்பாடம், கிராமவாசமும், சுத்தமும் வியவஸாயம், சிடிசன்ஷிப் இவைகள் பள்ளிக்கூடத்தில் புஸ்தகங்கள் மூலமாகச் சொல்லிக்கொடுக்கப்படும்.

(2) இவைகளிலும் வியவஸாயத்துக்குரியவைகளையே முக்கியமாக சொல்லிக்கொடுக்கப்படும். அதாவது கணிதத்தில் நாணயம், நிறை, அளவு, விலை மதிப்பு, வட்டிபோடுதல் இவ்விதபாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படும். பாலிலிருந்து வெண்ணெய் எடுப்பதைப்பற்றியும் ஆடுமாடுகளின் நோய்களைப்பற்றிய சாஸ்திரமும்சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். பாடங்களின் விபரமும் அதற்குச்சம்பந்தப்பட்ட ஆபீஸரின் பெயரும்அடியில் விபரமாய் காட்டப்பட்டிருக்கிறது.

**A: வியவசாயம்.** .... .... **140 பாடங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| (1) | பூமியின் மண்திறம் ... .... | 10 | பாடங்கள் |
| (2) | வியவஸாயக் கருவிகள் .... .... | 6 | ,, |
| (3) | தண்ணீர்பாய்ச்சல் ... ... | 8 | ,, |
| (4) | உரம் ... ... | 10 | ,, |
| (5) | பயிர்கள் ... ... ... | 20 | ,, |
| (6) | விதையும், விதைபொறுக்கி எடுத்தலும் ... | 5 | ,, |
| (7) | சேர்த்துவைப்பதும், வியாபாரம் செய்வதும் ... | 4 | ,, |
| (8) | ஆடு மாடுகள், பாலிலிருந்து வெண்ணெய் எடுப்பது | 10 | ,, |
| (9) | பயிர்களுக்கு ஏற்படும் நோய் ... ... | 10 | ,, |
| (10) | பண்ணையும், பண்ணையைப்பாதுகாப்பதும் ... | 4 | ,, |
| (11) | தோட்டமும், தோட்டப்பயிரும் ... ... | 10 | ,, |
| (12) | பரம்படித்தல், அலைது மட்டப்படுத்துதல் ... | 2 | ,, |
| (13) | மென்சுரேஷன், பீல்ட்ஸர்வேயிங் ... ... | 10 | ,, |
| (14) | பூமியின் அமைப்பு ... ... ... | 4 | ,, |
| (15) | கணிதம் ... ... ... | 4 | ,, |
| (16) | பொருள்பாடம் ... ... .... | 6 | ,, |
| (17) | கிராமத்துக்குரிய Economics and Sanitation... | 10 | ,, |
| (18) | ஐக்கியம். (ஒற்றுமை) ... ... ... | 5 | ,, |
| (19) | காடுகளின் பிரயோஜனம், மரம் செடிகள் பயிர் செய்வது | 2 | ,, |

இந்த 140 பாடங்களும் வியவஸாயத்தைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களால் சொல்லிக்கொடுக்கப்படும். Veterinary Assistant அவர்கள் ஆடு மாடு முதலியவைகளின் நோய்களை நிவர்த்திக்கவேண்டிய 28 பாடங்கள் சொல்லிக்கொடுப்பார். Workshop சார்ஜையும் ஸமஸ்தானத்தின் ஆயில் இஞ்சின் சார்ஜையும் வகிக்கிற உத்தியோகஸ்தர்களால் தச்சுவேலைகள் கொல்லுவேலைகள் ஆயில் இஞ்சின்ஓட்டும்விதம் இவைகளைப்பற்றிய 28 பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்

படும். Training School மாணுக்கர்கள் திங்கட்கிழமை வியாழக்கிழமை இரண்டுதினமும் காலை 6 மணிமுதல் 8மணிவரையில் விவசாயத்தை கற்றுக் கொள்ளும்பொருட்டு பண்ணைக்குவரலாம், பயிரிடும் விதங்களையும் அதினின்றும் உண்டாகியிருக்கும் பயிர்களையும்பார்க்க மாணுக்கர்களை ஸ்டேட் முழுவதும் கூட்டிக்கொண்டுபோவதற்குத்தக்க ஏற்பாடுகளும் செய்யப்படும்.

### நடத்திக்காட்டும் செய்கைகள்.

ஜூன் ஜூலை—ஆரம்பவிவசாயம் (உழுவது, கட்டி உடைத்தல் [முதலானவை

ஆகஸ்டு செப்டெம்பர்—உரம், அதை உபயோகிப்பது.

செப்டம்பர் அக்டோபர்—விதை, விதைவிதைப்பதும், பிற்பாடு அதை [நடுவதும்.

அக்டோபர் டிசம்பர்— களையெடுத்துப்பயிரைக்காப்பாற்றுவது.

டிஸம்பர் பிப்ரவரி–கதிர் அறுத்து அடிக்கிறது.

பிப்ரவரி ஏப்பிரல்–சேர்த்துவைத்து வியாபாரத்திற்கு கொண்டுபோவது

மே—விடுமுறைகாலம்.

SIDNEY BURN
For Darbar.

---

## கடிதங்கள்.

---

### சபைநிகழ்ச்சி விபரங்கள்,

### புதுவயல் ஞானப்பிரகாச ஸபை.

ஸ்ரீ பரமேசுவரரது திருவருளால், ஒழுங்குற நடைபெற்றுவரும் இச்சபையின் 2 வது ௵ 10வது மாதாந்தக் கூட்டம் நள ௵ பங்குனி௴ 30௳ (12-4-17) குருவாரம் மாலை 3½ மணிக்கு (லால்குடி) பிரம்மஸ்ரீ. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களின் அக்கிராஸனத்தின் கீழ்க்கூடி, மேல்வருமாறு நிகழ்வுற்றது.

## (நிகழ்ச்சிவிவரம்)

| விஷயங்கள் | உபந்நியாசகர்கள். |
| --- | --- |
| 1 பிரம்மஸ்ரீ. தலைவரவர்களின் வரவேற்பு | (மனமயூர. மெ. வி. ஸபா காரியதரிசி) ஸ்ரீமான். சுப. குமரப்பசெட்டியாரவர்கள். (ஞா. பி. ஸ. காரியதரிசியவர்கட்காக) |
| 2. முகவுரை | பிரம்மஸ்ரீ. தலைவரவர்கள் |
| 3. வித்தியாசாலை | சுப. அண்ணாமலை (ஞா. க. மாணவன்) |
| 4. மனமேகாரணம் | பிரம்மஸ்ரீ. மீனாட்சிசுந்தரம் ஐயரவர்கள் (ஞா. க. ஆங்கில ஆசிரியர்) |
| 5. ஸத்தியம் | (அ. சி. த. அ.) காவேரி ஸ்ரீ. M. V. G. அவர்களின் மாணவி, காரைக்குடி. |
| 6. (கம்பராமாயணத்துள்) "கருணைகண்டதயரதன" என்னும் தலைப்பினையுடைய காப்புச் செய்யுளாராய்ச்சி. | டி. பிரம்மஸ்ரீ. M. V. கோவிந்தராஜ ஐயங்காரவர்கள். |
| 7. தேவாரப்பிரபாவம் | ஸ்ரீமத். ஞானலிங்கதேசிகரவர்கள். |
| 8. பதியிலக்கணம் | ஸ்ரீமத். C. துரைசாமிதேசிகரவர்கள்.) (ஞா. க. தமிழாசிரியர்.) |

9. பிரம்மஸ்ரீ. தலைவரவர்கள், ஒவ்வொரு உபந்நியாஸத்தின் முடிவிலும் அவ்வவ்விஷயத்தை நன்கு விளக்கத்தக்க, தமது அரிய அபிப்பிராயங்களை வியக்தமாகக் கூறினார்கள்.

10. டி. ஞா. க. தமிழாசிரியரவர்களின் குமாரர். C. D. சுப்பிரமணியம் என்பவரால், இடையிடையே தேவார, திருவாசகாதி யருட்பாக்கள் இன்னிசையோடு ஓதப்பெற்றன.

டி. ஞா. க. ஆங்கில ஆசிரியரவர்களால் முறைப்படி வந்தனோபசாரமும் இராஜவாழ்த்தும் கூறப்பட்டு, கடவுள் வாழ்த்துப்பாடி ஆர, சந்தன, தாம்பூலாதிகள் வழங்க, மாலை 9 மணிக்கு மங்கள கோஷத்துடனே, ஸபை நன்கு நிறைவேறியது.

குறிப்பு:—தற்காலம் இராமேசுவர யாத்திரை செய்திருந்த (ஞா. க. காரியதரிசி) ஸ்ரீமான் சோமசுந்தர செட்டியாரவர்கள் இம்மாதக் கூட்டத்துக்குத் தாம் வரக்கூடாமற் போயினமையால், வழக்கம்போல ஸபையைச் சிறப்பாக நடப்பிக்கும்படி தம்முடைய பிதாவுக்குத் தந்தி மூலமாகத் தெரிவித்திருந்ததோடு, இத்தகைய கூட்டத்தின் தலைவரவர்களையும், மேற்கூறியவாறே தந்திமூலமாகக் கோரிக்கொண்டார்கள். அத்தந்தி உபந்நியாஸ நிகழ்ச்சி காலத்தில் கிடைத்து ஸபையில் வாசிக்கப்பட்டுப் பேரன்பும் ஊக்கமுங் கொண்டு ஸபை செவ்வனே நடைபெற்றது.

நன்மை நவில்வோன்.

# தேவகோட்டை

## வைசிய சிவாநந்தஸபை.

---

மேற்படி சபையின் சித்திரை மாதத்திய கூட்டம் நாளது சித்திரைமீ 13௳ புதன்கிழமை யன்று தேவகோட்டைச் சிவாலயத்தின் முன்னுள்ள அலங்காரக் கொட்டகையில் மகிபாலன்பட்டி வித்வான் மு. கதிரேசன் செட்டியாரவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் நடைபெற்றது. தனவைசியஸ்ரீமான்கள் பலர் வந்திருந்தார்கள். பல வித்வான்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீமான். மு கதி-அவர்கள் ஆரம்பப் பிரஸங்கத்தை அவர்களது படிப்பின் முதிர்ச்சிக்குத் தக்கபடி சபையின் நோக்கத்தைச் சொல்லிமுடித்து பிர்மஸ்ரீ சுந்தரேசுவரய்யரவர்களைக் கொண்டு வரகுணபாண்டியனது சரித்திரத்தைப் பிரஸங்கிக்கச் சொல்லி ஆசனத்தமர்ந்தார்கள்.

அவர்கள் பல மேற்கோள்களுடன் வெகு அழகாகப் பிரஸங்கித்ததில் வரகுணனுக்கு ஏற்பட்ட பிர்மஹத்தி திருவிடைமருதூரில் நிவர்த்தியடைந்ததையும், அங்கவர் ஈசுவரபக்தியால் ஈடுபட்டுப் பலவிதக் கைங்கரியங்களைச் செய்து, மற்றுமுலகத்தவர்களும் ஈசுவரனது திருக்கருணைக்குப் பாத்திரர்களாகும்படி அரசனாகவிருந்தும் வழிகாட்டியாக விருந்தாரென்பதையும் பிரசங்கித்த பின்னர், சைவசித்தாந்த பிரசாரகர் பொ. முத்தைய்யா பிள்ளையவர்கள் சித்தாந்த சாரமென்பதைப் பற்றி சித்தாந்த சாஸ்திர ஆராய்ச்சி பலத்தால் நன்கு பிரசங்கித்தார்கள்.

வித்வான் மு. கதி. அவர்கள் பிரஸங்கத்தின் சாரத்தை யாமோதித்துச் சபையாருக்குச் சொல்லியபின் உத்தம காவியமாகிய சிலப்பதிகாரத்தின் முக்கிய பாகமான கண்ணகியின் கற்பு முதலியவற்றைச் சபையோர்களது வேண்டுகோளுக்கிணங்கி கேட்டோர் ஆநந்திக்கும்படி நீண்ட நேரம் பிரஸங்கித்தார். வடமொழி தென்மொழிகளில் பயின்ற மேதாவியான மு. கதி. அவர்களுடைய பிரஸங்கம் மேற்படி தேவகோட்டையில் நடந்த சைவாகம சித்தாந்த பரிபாலன சபையிலும் செய்யப்பட்டது. ஒவ்வொன்றும் அவர்களுடைய வித்வத் திறமையை வெளிப்படுத்தியது. பிரஸங்கங்களின் முழு விஷயங்களையும் பலரும் படித்துத் தெரியும்படி சுருக்கெழுத்தில் எடுத்து வெளியிடவேண்டும். தமிழில் சுருக்கெழுத்தில்லாதது விசனிக்கத்தக்கது.

---

### பலவான்குடி.

### மணிவாசகசங்கம்.

இன்று திருவருட்பேற்றால் நமது மணிவாசகசங்கத்தின் மாதக்கூட்டம் கூடிற்று. காரைக்குடி கம்பராமாயணப் பிரசாரகர் ஸ்ரீ M. V. கோவிந்தராஜய்யங்காரவர்கள் அக்கிராசனம் வகிக்க, சங்கராசாரியர் பெருமை குரு கடாக்ஷம், என்பவைகளை குன்றக்குடி ஸ்ரீ. சதாசிவப்பிர்மம், திருவாசகமடம் ஸ்ரீ சிதம்பரசுவாமிகள் இருவரும் உபந்நியசிக்க, தேவகோட்டை வைசிய சிவானந்த சபையாரால் அனுப்பப்பெற்ற கல்வி என்னும் வியாசம் கோசகர்

கவி கலாசாலைமாணவன் சம்பந்தனுல் படிக்கப்பெற்றது. முடிவில் தலைவரவர்கள் அபிப்பிராயங் கூறியபின்னா வந்தனோபசாரத்துடன் ஆரசந்தனுதிகள் வழங்க, சபை இனிது நடைபெற்றது. சிவன்கோவில் கொட்டகையில் பிரம்மஸ்ரீ முத்துராமலிங்க சாஸ்திரி யாரவர்களால் ஸ்ரீமத் ராமாயணப் பிரசங்கம் ககரத்தார் முயற்சியின்பேரில் இன்றுதொடங்கி நடைபெற்று வருகின்றது. ஜனங்கள் சிரத்தையுடன் சிரவணஞ்செய்து பக்திபாராட்டுகிருர்கள். சுபம். இங்ஙனம் ஷண்முகநாதன்.

---

## வைத்தியக் குறிப்பு.

### பேராத்தை.

வருஷாந்தரப் பயிரான இச்செடி திருவாங்கூர் முதலான பிரதேசங்களில் அபரிமிதமாய் விளைவதுண்டு.

இச்செடியின் வேர் சிறிது வாஸனையுள்ளதாகவும் கசப்பாகவும் இருக்கும். வயிற்றுப் பொருமலைப் போக்கவும், பசியை உத்தீபனம் செய்யவும் இதற்குச் சக்தியுண்டு. இதைக்கஷாய மிட்டு ஜ்வரங்களிலும் ஆமவாத மென்னும் கீல்வாயுவிலும், ஜலதோஷம் அதிகரிப்பதா லுண்டாகும் தேஹக் கோளாறுகளிலும் உபயோகிக்கலாம். வாயில் துர் நாற்றமுண்டானுல் அதைப் போக்குவதற்கு இதை உபயோகிப்பதுண்டு. நீரிழிவு வியாதியில் இதைப் பிரயோகித்துக் குணம் கண்டதாகவும் சில வைததியர்கள் சொல்லுகிறுர்கள். தொண்டைக் கம்மலைப் போக்கி நலல தொனியை யுண்டுபண்ணுவதற்கு ஏற்ற சாக்குசுக்குகளுக்குப் பதிலாகவும் சிலசமயம் இதை வைத்தியாகள் உபயோகித்து வருகிருர்களாம்.

---

# விளம்பரம்.

---

ஆத்திக்காடு தெக்கூர்காடப்பசெட்டிமகன்சுப்பிரமணியஞ்செட்டி தெரிவிப்பதாவது:— என் தமையன் பவுத்திரனும் தாய் தந்தை இழந்தவனுமான ஆண்டியப்பனென்ற காசியென்பவன் பெரு ஹுகாலமாய் பென் வீட்டிலிருந்து வளர்ந்து வந்தான். சிலகாலமாய் ஷை காசியென்பவன் கெட்ட சாவகாசத்தினுல் பஞ்சமா பாதகத் தொழிலில் புகுந்து அங்குஅங்கே உண்டுதிரிவதால் ஒருவருஷகாலமாய் பெங்கள் வீட்டிலிருந்து விலகி விட்டான். என் குடும்பத்தில் ஷை யானுக்கு யாதொரு பாத்தியமு மில்லை.

கா. சுப்ரமணியஸ்செட்டி.